Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

டிசம்பர்-2023
நாடார் :13
முரசு :12



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-



தூத்துக்குடி மாவட்டம், சிவஞானபுரம்
**எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர்**
தெய்வத்திருவாளர்கள் **P.வேல்சாமி நாடார் - V.மங்களம்** அவர்களின்
நல்லாசியுடன்
**திரு.V.பாலசேகர், B.செல்வமலர்** அவர்களின்

## இல்லத் திருமண விழா

மணமக்கள் :-
**B.நிஷாந்த் - S.பபிதா**

மணநாள் :-
**27.10.2023**

இடம்:-
**அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிசுவாமி கோவில்**
திருசெந்தூர்




















வரவேற்பு : **27.10.2023**
**யூனிக்கா மஹால்**
சிவஞானபுரம்,
தூத்துக்குடி மாவட்டம்.

சென்னையில்
வரவேற்பு : **01.11.2023**
**சௌபாக்கியா மஹால்,**
அரும்பாக்கம், சென்னை.

*வருகை தந்து வாழ்த்திய அனைவருக்கும்*
*நன்றி! நன்றி!! நன்றி!!!*

# ANNAI VEILANKANNI'S
## GROUP OF EDUCATIONAL INSTITUTIONS



### Courses Offered

### COLLEGE FOR WOMEN (Arts & Science)
Affiliated to University of Madras | Accredited by NAAC

**UG Courses**

- **B.Com.**
  - General
  - Accounting & Finance
  - Computer Applications
  - Information Systems Management
  - Corporate Secretaryship
- **B.A.**
  - English Literature
- **B.B.A.**
- **B.C.A.**
- **B.Sc.**
  - Bio-Chemistry
  - Mathematics
  - Computer Science

**PG Courses**

- **M.Com.** • **MHRM** • **M.Sc.** • Comp. Science • Bio-Chemistry

### COLLEGE OF ENGINEERING
Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

**B.E.**

• Civil • Mechanical • EEE
• ECE • Computer Science

SC / ST / SCA / BCC மாணவர்களுக்கு கல்வி மற்றும் பேருந்து கட்டணம் கிடையாது

DIRECT SECOND YEAR LATERAL ENTRY SEATS AVAILABLE

**ANNA UNIVERSITY COUNSELING CODE: 1133**

### Other Professional Courses

• B.Ed. • D.T.Ed.
• B.Pharmacy • M.Pharmacy
• B.Sc. Nursing
Diploma in Nursing (GNM)















**Dr. S. Devaraj**
Chairman



**Dr. D. Dev Anand**
Secretary



**Dr. D. Johny Christopher**
Director

#81, VGP Salai, West Saidapet, Chennai-600 015
**Tel.: 044-43523712, 24710820**

#33, Gandhi Road, Near Perungalathur Railway Station
Nedungundram, Chennai-127
**Tel.: 044-22794192, 22794155, 22794064**

Helpline : 9282144444 | Email : mail4avc@gmail.com | www.annaiveilankannis.com

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

*கௌரவ ஆசிரியர்:* **விஜய்வசந்தகுமார்.**

*பேராசிரியர்:* **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.,

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்:தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார் தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ் தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.



தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**



இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர் டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுரூஷோத்தமன்,M.A.,B.Ed



ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.


விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

**A/c No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**

# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!**



சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்த நாட்டின் இளைஞர்களின் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நிலைமை போன்றவற்றை வைத்துதான் கணக்கிட முடியும். அதே போல் ஒரு நாட்டின் பெருமையும், புகழும் பாதுகாப்பும் அந்த நாட்டின் முதியோர்களின் பாதுகாப்பிலும் தான் இருக்கிறது. உலக அளவிலேயே கூட தற்கால இளைஞர்களில் பலர் சரியான வழி காட்டுதலின்றி திசைமாறி செயல்படுகிறார்கள். ஆகவே தான் உலக சமாதானமும், நல்லிணக்கங்களும் உலக அளவில் சிதைந்து கொண்டிருக்கிறது. உலகமே எப்போதும் அரசியல்வாதிகளின் சதுரங்க விளையாட்டில் சிக்கி தவித்து அதிலிருந்து விடுதலை ஆகி தான் நல்ல நிலை அடைந்திருக்கிறது. சாக்ரடீஸ் மாமேதை ஏதென்ஸ் நகரத்து இளைஞர்களை தான் மனம் மாற்றினார். இப்படி இளைஞர்களின் முக்கியத்துவம் எவ்வளவு பெரியது என்று உலகிற்கே தெரியும். அதுபோல் தான் இந்திய அளவில் கூட பல இளைஞர்களின் மனதில் நஞ்சு கலந்து தான் இருக்கிறது. நல்லது, கெட்டது என்ன என்று விளக்கி கூறினாலும் அவர்களுக்கு புரிவதில்லை. அந்த மனப்பான்மையை சுய நல அரசியல்வாதிகள். சரியாக பயன்படுத்தி கொள்ளுகிறார்கள். அதுபோலவே இளைஞர்களின் மனமாற்றம் ஒரு சமுதாய முன்னேற்றமும் சம்பந்தப்பட்டவைதான். நாடார் சமுதாயத்தைப் பற்றி உலகமே புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த தலைமுறையினர் உழைத்த உழைப்பை பயன்படுத்தி தற்கால இளைஞர்கள் புகழ் லீலை பாடிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய தான் என்ன செய்ய வேண்டும் தனது வருங்கால சந்ததியினருக்கு என்ன செய்து வைத்திருக்கிறோம் என்று உணரவில்லை பல இளைஞர்கள் படிப்பிலே கவனம் செலுத்தாது, பிற ஜாதியை இழிவாக பேசி பிற மதத்தவரை வம்புக்கு இழுத்து சமுதாய கலவரங்களை தூண்டுகிறார்களே ஒழிய தன் சுய முன்னேற்றத்தில் கவனம் செலுத்தாது, அரசியல்வாதிகளின் சூழ்ச்சிவலையில் சிக்கி ஜே! ஜே!! போட்டுக்கொண்டு, பெற்றோர்களின் மனவேதனைக்கு காரணமாகிவிடுகிறார்கள். ஆகவே நாடார் இளைஞனே உன்னை வளர்த்துக்கொள் நாம் பின் தொடரும் தலைவர்களால் சமுதாயத்துக்கோ உனக்கோ என்ன நிலைமை என்று எண்ணிப்பார் பழைய சரித்திரங்களில் உள்ளவைகளே தோண்டுவதை விட நீ சரித்திரம் படைக்க முயற்சித்துக் கொள். சமுதாயம் மரியாதையும், மதிப்பும் அப்படியே நிலைத்திருக்க நாடார் இளைஞனே சிந்தித்து செயல்படு.!!!

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-8

**டாக்டர் ஆ.தசரதன் 9444169603.**



கி.பி.1639ஆம் ஆண்டில் மானவீர வளநாடு எனும் மானாட்டின் வடபற்று ஆட்சியாளர்களான ஏழுகரைக்காரப் பாண்டியர் சார்புடையவர்களைப் போரில் வென்று ஆதித்தன் தலைமையிலான பத்து ஆட்சியாளர்கள் அப்பகுதியை ஆட்சி செய்தது பற்றியும் அவர்களுள் வீரப்ப நாடன் என்பவர் பற்றியும் இந்தியன் நாடார் முரசின் 2023 நவம்பர் மாத இதழில் எழுதியிருந்தேன்.

வீரப்ப நாடனும் வேறு இரு ஆட்சியாளர்களும் உள்ளடங்கியிருந்த முதல் அணியில் மீனவர்களை வென்று கைப்பற்றியதில் பங்கு பிரிப்பதில் ஏற்பட்ட பிரிவினை காரணமாக இம் மூவரும் வெளியேறி ஆதித்தன் தலைமையில் ஏற்பட்ட அணியில் சேர்ந்து போர் செய்து அவ் எழுவரையும் வென்று வடபற்று ஆட்சியைக் கைப்பற்றினர் என்பது பற்றியும் அதே ஆண்டில் தேரியில் அமைந்த கல்வெட்டுப் பற்றியும் மேற்குறிப்பிட்ட இதழில் பதிவிட்டிருந்தேன்.

வீரப்ப நாடன் ஆதித்த நாடனைக் கொலை செய்து தப்பி ஓடிவிட்டதாகவும் அதன்பிறகு அவர் பற்றி எதையும் பேராசிரியர் தா.மாசில்லாமணி நாடன் தெரிவிக்கவில்லை என அவருடைய நூலான பாண்டிய தேச ஆதித்த வம்ச வரலாறு (கி.பி.1931) என்பதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் கி.பி.1639 ஆம் ஆண்டிலேயே ஆலங்குளப் பகுதியில் பாடப்பெற்ற வீரப்ப நாடன் பேரிலான வில்லுப் பாட்டு ஆவணத்தில் அந்த ஆண்டுக்கு முந்தைய வரலாறும் பிந்தைய வரலாறும் இடம் பெற்றிருப்பதால் மானாட்டின் அன்றைய வரலாறும் மானாட்டார் பற்றிய அறிமுக வரலாறும் இனி எழுதப் பெறும்.

வீரப்ப நாடான் குடியிருப்பு எனும் ஊர் மானவீர வளநாட்டில் இருந்ததும் அவர் சார்ந்தோர் சிலர் சீருடையார்புரத்திற்குக் குடியேறிவிட்டதும் தெரியவருகின்றது. இவை நிலைமை ஊர்களே.

வீரப்பநாடனும் தென்காசிப் பகுதியைச் சார்ந்த ஆலங்குளம் வட்டாரத்திற்குக் குடியேறிவிட்டதால்தான் அவர்பேரில் அந்த வில்லுப்பாட்டு ஏற்பட்டுள்ளது என்பது யாவரும் அறியக் கூடியதே.

வில்லுப்பாட்டு சில வரலாற்று ஆதாரங்களுடனும் அமைவது என்பதால் வரலாற்று ஆவணமாக ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அந்த அடிப்படையில் வீரப்ப நாடன் பேரில் பாடப்பெற்ற பாட்டிலும் சில வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற்றிருப்பதால் மானாட்டு வரலாறு எழுதுவதற்கு ஆவணமாக அதைக் கருத வேண்டியுள்ளது.

முதலில் ஏழுகரைப் பங்காளிகளின் பெயர்களைத் தெரிந்துகொள்வோம். விண்டி நாடார், வீரப்ப நாடார், சிம்மங்கரைநாடார், குமாரக்கரைநாடார், அத்திப்பெரிய நாடார், அறம் வளர்த்தான் நாடார், சரவணப் பெருமாள் நாடார் ஆகிய இவர்களை வில்லுப்பாட்டு தெரிவிக்கின்றது.

ஆனால், வீரப்ப நாடானுடன் வேறு இரு நாடான்களும் அதாவது வள்ளிக்குட்டி நாடனும் தீத்தியப்ப நாடனும் சேர்ந்தே வெளியேறி ஆதித்த நாடனை அணுகினர் என அறிந்து கொள்ளலாம்.

இந்தப் போர் தொடர்பான வரலாற்றை எழுதியோர் ஏழுகரைப் பங்காளிகளாகப் போரில் ஈடுபட்டோர் எனக் கீழ்க்காணும் எழுவரை அடையாளம் காட்டுகின்றனர். அவர்கள் வெட்டி ஆண்டான் என்னும் வெற்றி கொண்ட நாடன், சிம்மங்கரையான் என்னும் சிமிளி, பின்னங்கரையான், குமாரக்கரையான், அத்திப் பெரியவன், அறம் வளர்த்தாண்டான், சரவணப் புதியவன் ஆவர்.

பின்னங்கரையான் நாடன் புதிதாக இந்த அணியில் இடம் பெற்றுப் போரில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிகின்றது. இவர்களுள் சிலர் பாண்டியர் தொடர்புடைய முக்கந்த நாடார்கள் என்றும் எஞ்சியோர் பாண்டியர் தொடர்புடைய மானாட்டினர் என்றும் அறிந்து கொள்ளலாம்.

இனி, வீரப்ப நாடன்பேரில் பாடப்பெற்ற வில்லுப்பாட்டின் தொடக்கத்தில் உள்ள வரலாற்றைப் பார்ப்போம்.. விண்டிநாடார், (வெட்டி ஆண்டான் என்னும் வெற்றி கொண்ட நாடன் எனவும் அழைக்கப்பட்டுள்ளார் போலும்) சொக்கலிங்கம் என்றும் அழைக்கப்பட்டதாக வில்லுப்பாட்டு தெரிவிக்கின்றது. விண்டி என்பது விஷ்டி என மருவியுள்ளது. விண்டி நாடாரும் வீரப்ப நாடாரும் பரம்பரையாய் மாமன் மைத்துனராம்.

இந்த விண்டி என்ற விஷ்டி நாடார் வகையறாவினர் இன்றையளவில் வேம்பாறு பக்கம் விருதுநகரிலிருந்து பின்னர், தூத்துக்குடி, சிவகாசி ஆகிய ஊர்களில் வணிகம் செய்து வருவதாக வில்லுப்பாட்டைப் புதுக்கி எழுதியவர் வசனம் எனும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் மானாட்டினரில் ஒரு பிரிவினர் எனலாம். மானாட்டார் என அழைக்கப்படுவர் என்பது தவறாகாது. மதுரைப் பாண்டியன் தொடர்பாக வந்து மானவீரவளநாடு போன்ற பகுதிகளில் குடியேறிப்பின்பு கரிசல் காட்டுப் பகுதிகளில் அதிக வணிகர்களாகவும் அருகருகே உள்ள பகுதிகளில் விவசாயிகளாகவும் குடியேறிய மானாட்டாரின் சமூகப் பண்பாட்டு வரலாறு விரிவாக எழுதக்கூடியதே.

✶ விஷ்டி நாடாருக்கு வைப்பாறு மேல் மாந்தை கமுதி நகரானதிலே திருமணம் நடந்தேறியுள்ளது. இத்தொடர்பில்தான் மானவீர வளநாட்டிலிருந்து கரிசல் காட்டுப்பகுதிகளில் மானாட்டார் சிலர் குடியேறியதாகத் தெரிகிறது. இது கி.பி.1639க்குப் பிறகாகலாம்.

✶ ஏழுகரைப் பங்காளிகளுக்கும் மீனவர்களுக்கும் சண்டை இத்திருமணத்திற்குப் பின் ஏற்பட்டுள்ளது. மீனவர்களின் ஆடு, மாடு, காணிகாச்சிப் பூமி நிலங்களைக் கைப்பற்றிய ஏழுகரைப் பங்காளிகளுக்கிடையே பங்கு பிரிப்பதில் தகராறு ஏற்பட்டுள்ளது.

✶ வீரப்ப நாடனும் தீத்தியப்ப நாடனும் ஆதித்த நாடனிடம் (இன்னொருவர் பெயர் குறிப்பிடாமல் மூன்று பேர்கள் என்கிறது பாட்டு) தங்கள் மனக்குறைகளைச் சொன்னார்கள். அதன்பிறகே யுத்தம் ஏற்பட்டு, மானாட்டு வடபற்று ஆட்சி ஆதித்தன் தலைமையிலான அணிக்குக் கைமாறியுள்ளது.

✶ வீரப்ப நாடன் அதன் பின்னரும் குழப்பம் செய்ததாக வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். அவர் வகையறாவினர் தென்காசிப்பகுதிக்கு (இதுவும் தென்காசிப் பாண்டியர் தொடர்பானது ஆகும்). குடியேறியுள்ளனர் ஆதலால் அப்பகுதியினரால் மானாட்டார் என அழைக்கப்பட்டுள்ளனர். வடபகுதிகளுக்குச் சென்ற பிற மானாட்டார் போல் தென்காசிப் பகுதிகளுக்குச் சென்ற பிறரும் மானாட்டார் என அழைக்கப்பட்டனர்.

✶ மானாட்டார் மானவீர வளநாட்டிலிருந்து மேற்கும் வடக்கும் தெற்குமாகக் குடியேறியது அரசியல் காரணங்களுக்காகவும் தொழில் தொடர்பாகவும் என்பன தெரியவருகின்றன. வறட்சியும் ஒரு காரணமாகலாம். அரசியல் காரணத்திற்கு ஆதாரம் இருப்பதையே இக்கட்டுரையில் நான் பதிவிட்டுள்ளேன்.

கி.பி.17ஆம் நூற்றாண்டின் மையத்தில் மானாட்டாரின் குடியேற்றம் தொடங்கிச் சில பல ஆண்டுகளில் பல்கிப் பெருகியுள்ளதாகத் தெரிவதால் கி.பி.18ஆம் நூற்றாண்டின் வரலாறும் அவர்கள் தொடர்பாக அமைந்துள்ளதைப் பதிவிட வேண்டிய கட்டாயம் உள்ளது.




Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

**SRI LAKSHMI ENTERPRISES**

Scaffollding & Shed contractor / School, College, Church &
Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

# விழித்தெழு!! இளைஞனே...விழித்தெழு

## வெற்றிக்கான பாதை -கடின உழைப்பு

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பது சான்றோர் வாக்கு ஆகும். இது அனைவருக்கும் பொருந்தும் கூற்றாகும். கடின உழைப்பு வெற்றிக்கு வழிகாட்டுகின்றது."

இந்த உலகில், வெற்றி அடைய விரும்பும் ஒருவருக்கும், கடின உழைப்பு முக்கியமாக இருக்கும், வெற்றி பெறுவதற்கு ஒரே வழி உழைப்புத்தான். எனவே வெற்றியை உருவாக்குவதில் உழைப்பு மிகப் பெரிய மூலதனம் எனலாம். எவ்வளவுக்கெவ்வளவு உழைக்கின்றோமோ அந்த அளவிற்கு நமது முன்னேற்றம் உயரும். வெற்றியைத் தேடுவதில், காலத்தால் அழியாத பழமொழி ஒன்று காலத்தின் சாதனையாக நிற்கிறது. "கடின உழைப்பு வெற்றிக்கு வழிவகுக்கிறது." இந்த கொள்கை பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்த எண்ணற்ற நபர்களால் எதிரொலிக்கப்பட்டுள்ளது. திறமை, அதிர்ஷ்டம் மற்றும் வாய்ப்பு ஆகியவை சந்தேகத்திற்கு இடமின்றி முக்கியமான பாத்திரங்களை வகிக்கின்றன என்றாலும், சாதனையின் மறுக்க முடியாத மூலக்கல்லானது கடின உழைப்பு, இடைவிடாத அர்ப்பணிப்பு முயற்சியாகும்.



வெற்றி என்பது பெரும்பாலும் திறமையுடன் இணைக்கப்பட்டுள்ளது, மேலும் திறமை என்பது தொடர்ச்சியான கடின பயிற்சியின் விளைவாகும். எண்ணற்ற மணிநேரங்கள் தங்கள் திறமைகளை மெருகேற்றும் விளையாட்டு வீரர்கள், அயராது பயிற்சி செய்யும் இசைக் கலைஞர்கள் அல்லது தங்கள் கைவினைப்பொருளில் தேர்ச்சி பெற அர்ப்பணிப்புடன் இருக்கும் விஞ்ஞானிகளை கவனியுங்கள். வெற்றிக்கான பயணம் அந்தந்த துறைகளில் சிறந்து விளங்கும் நபர்களின் வியர்வை மற்றும் விடாமுயற்சியுடன் வழிவகுக்கப்படுகிறது.

வாழ்வில் வெற்றியடைய தொடர் முயற்சி வேண்டும். தாமஸ் ஆல்வா எடிசன் அவர்கள் பல்பை உருவாக்கும் போது பலமுறை தோல்வியைத் தழுவினார். ஆனாலும் மீண்டும் மீண்டும் சிலந்தியைப் போல முயன்று வெற்றியும் கண்டார். அதனால் நாமும் நம் வெற்றியை நோக்கி வீறுநடைப் போடுவோம். தடைக்கற்களை எல்லாம் படிக்கற்களாக்கி வெற்றி வாகை சூடுவோம்.

கடின உழைப்பு, பின்னடைவுகளை எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் இருக்கக் கற்றுக்கொடுக்கிறது. முயற்சியில் ஈடுபடவும், தோல்விகளில் இருந்து கற்றுக்கொள்ளவும் தயாராக இருப்பவர்கள், அவர்கள் தேர்ந்தெடுத்த முயற்சிகளின் சிக்கல்களைத் தீர்க்க சிறப்பாகத் தயாராக இருக்கிறார்கள். கடின உழைப்பு நிலையான முன்னேற்றத்தையும் உறுதி செய்கிறது. வெற்றி என்பது பெரும்பாலும் காலப்போக்கில் சிறிய, நிலையான முயற்சிகளின் உச்சம். அது கல்வி, தொழில் அல்லது தனிப்பட்ட வளர்ச்சியில் எதுவாக இருந்தாலும், கடின உழைப்பின் மூலம் எடுக்கப்படும் அதிகரிக்கும் படிகள், குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும் ஒட்டுமொத்த விளைவுக்கு பங்களிக்கின்றன. நிலையான முயற்சியின் மூலம் தனிநபர்கள் தங்களை உயர்த்திக் கொள்ளவும், தங்கள் இலக்குகளை அடையவும் முடியும்.

வெற்றி என்பது ஒரு குறிப்பிட்ட மைல்கல்லை எட்டுவது மட்டுமல்ல, அது அந்த வெற்றியை நிலைநிறுத்துவதும், கட்டியெழுப்புவதும் ஆகும். கடின உழைப்பு ஒரு வலுவான பணி நெறிமுறையை வளர்க்கிறது, ஒழுக்கத்தையும் அர்ப்பணிப்பையும் வளர்க்கிறது. உறுதியான பணி நெறிமுறைகளைக் கொண்ட நபர்கள் கவனம் செலுத்துவதற்கும், காலக்கெடுவைச் சந்திப்பதற்கும், ஆரம்ப வெற்றிகளுக்குப் பிறகும் சிறந்து விளங்க தொடர்ந்து பாடுபடுவதற்கும் அதிக வாய்ப்புள்ளது. நீண்ட கால வெற்றிக்கு இந்த தொடர்ச்சியான அர்ப்பணிப்பு அவசியம்.

கடின உழைப்பு வாய்ப்புகளை உருவாக்கும். வெற்றி என்பது பெரும்பாலும் சரியான நேரத்தில் சரியான வாய்ப்புகளைப் பெறுவதை உள்ளடக்கியது, மேலும் உழைப்பாளிகள் இந்த வாய்ப்புகளை அடையாளம் கண்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம். நெட்வொர்க்கிங், சவாலான திட்டங்களை எடுத்துக்கொள்வது அல்லது கூடுதல் மைல் செல்வது எதுவாக இருந்தாலும், கடின உழைப்பாளிகள் தங்கள் வழியில் வரும் சாத்தியக் கூறுகளுடன் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் வெற்றிக்காக தங்களை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். வாழ்க்கையே போர்க்களம் வாழ்ந்து தான் பார்க்கணும் என்பது போல் வெற்றி கிடைக்க வேண்டுமென்றால் கடுமையாகப் போராட வேண்டும். முதல் முயற்சியில் தோல்வி அடைந்தால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இலக்கை அடையும் வரை முயற்சிக்க வேண்டும். உழைப்பும் விடாமுயற்சியும் இருந்தால் எல்லா செயலிலும் வெற்றிதான்.

முடிவாக, கடின உழைப்புக்கும் வெற்றிக்கும் இடையே உள்ள தொடர்பு வெறும் க்ளிஷே (Cliche) அல்ல, அது ஒரு அடிப்படை உண்மை. மற்ற காரணிகள் நிச்சயமாக பங்களிக்கும் அதே வேளையில், கடின உழைப்பு என்பது தனிநபர்களை அவர்களின் இலக்குகளை நோக்கித் தூண்டும் லிஞ்ச்பின் (linchpin) ஆகும். வெற்றிக்கான பயணம் அர்ப்பணிப்பு, பின்னடைவு மற்றும் முன்னேற்றத்திற்கான இடைவிடாத நாட்டம் ஆகியவற்றால் குறிக்கப்படுகிறது. கடின உழைப்பு என்பது ஒரு முடிவிற்கான வழிமுறை மட்டுமல்ல, மாறாக நமது சொந்த வெற்றியின் சிற்பிகளாக நம்மை வடிவமைக்கும், மாற்றும், செயல்முறையாகும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வோம். இதை உணர்ந்தால் வாழ்க்கை உன்வசம்.!!! விழித்தெழு!!! இளைஞனே... விழித்தெழு...

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**




எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

**அடையார் ஆனந்த விநாயகர்**

**காய்கனி & பழங்கள் அங்காடி**

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

**அடையார் முருகன் டிராவல்ஸ்**

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்,
சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,





உரிமையாளர்:
த.பரமசிவன்

24 மணி நேர சேவை





**உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813**

**பேபி. புரோட்டீன்ஸ்**

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**





Prop.S.Balakrishnan

**(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)**

SELVAM TRADERS

**New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091**
**Ph: 9841193884, 044-22242096**







R.S.SANTHANAM

**Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai**

**R.S.SANTHANAM**

**ரேவதி ஹார்டுவேர்ஸ்**

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.
Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement
38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.





**SVS நாடார் திருமண தகவல் நிலையம்**

**(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)**

No.105, நல்ல தம்பி சாலை அண்ணா நகர், பம்மல், சென்னை-75.
எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு
**தொடர்புகொள்ளவும். ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424**
**E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**




# ஆர்.சித்தர்ராஜ் நாடார்

## குட்வில் ரியல் எஸ்டேட்

136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



# JEHOVAH

GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares
E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

C.மதியழகன்
செல்:9789095625.

வாழ்க வளமுடன்

# ஸ்ரீ கணேஷ் பவன்

SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.





SUGAM
HOSPITALS
*Symbol of Health*
THIRUVOTTIYUR & CHROMPET

MULTI SPECIALITY HOSPITAL

- WORLD CLASS INTENSIVE CARE UNIT
- 24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
- HITECH OPERATION THEATRES

THIRUVOTTIYUR
40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai -19.

CHROMPET
85 85 85 85 50
#107A, G.S.T. Road, Chrompet, Chennai -44

Dr.D.B.D.Sathiakumar M.D., Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M

OUR GROUP DIAGNOSTIC CENTERS

HIBEAM SCANS
TOTAL IMAGING

ROYAPURAM 25 95 17 57 PONNERI 27 97 34 44

---



செல்: 98405 57997, 98415 49955

**V.S.குமார் ரியல் எஸ்டேட்**

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

---





# SRI DEVI

## Enterprises

**Textiles & Readymades**

**1-A, B, Dhandeeswaram**
**Main Road, Velachery,**
**Chennai-42. Tel:22431334.**
**Cell:9444066626.**



**T.பரஞ்ஜோதி செல்வராஜ்**
**தலைவர், வேளச்சேரி நாடார் சங்கம்**

# காமராஜர் ஒரு சகாப்தம்

**விடுதலை வேள்வியில் காமராஜ்**

ஒரு நாள் மாற்று ஆள் வராததால், கல்லாப் பெட்டியைப் பூட்டிச் சாவியைக் கொண்டுபோய் மாமன் வீட்டில் வீசி விட்டுக் கூட்டத்திற்குச் சென்றான். அன்றைய கூட்டத்திற்கு, மதுரையின் பிரபல வழக்கறிஞரும் தேசிய இயக்க முன்னோடியுமான ஜார்ஜ் ஜோஸப் தலைமை தாங்கினார். கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், திடீரென வீசிய காற்றால் கியாஸ் லைட் புகை மண்டி ஒளி குறைந்தது. காமராஜ் உடனே ஓடிவந்து அதைச் சரி செய்து விட்டுத் தன் இடத்தில் போய் அமர்ந்து கூட்டத்தைக் கவனித்தான். காமராஜின் இந்தச் செயல் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது. டாக்டர் வரதராஜுலு நாயுடு சரளமாக, அழுத்தம் திருத்தமாக, வலக் கையை அடிக்கடி உயர்த்தி, சுட்டு விரலை நீட்டி அரசியல் நிலை குறித்துப் பேசினார். அவருடைய தெளிவான பேச்சு பட்டி தொட்டிகளில் எல்லாம் தேசியக் கனலை மூட்டியது. அன்றைய கூட்டத்தில் ஹோம் ரூல் இயக்கத்தின் தலைவர்களான அன்னி பெஸண்ட் அம்மையாரையும் வாடியாவையும் உதகமண்டத்தில் ஆங்கில அரசு கைது செய்ததைக் கண்டித்துப் பேசினார். கூட்டம் முடிந்ததும் வீடு திரும்பிய காமராஜை தாய்மாமன் பக்குவமாகப் பேசிக் கடைக் கணக்கை முடிக்க அழைத்துச் சென்றார். அவர் நடத்திய முறையும் கூறிய அறிவுரைகளும் தன்னிடம் மாமன் வைத்துள்ள மரியாதையையும் மதிப்பையும் காமராஜுக்கு உணர்த்தின.

தாய்மாமன் கருப்பைய நாடார், காமராஜின் அரசியல் ஈடுபாட்டைக் குறைக்கத் திருவனந்தபுரத்திலிருந்த தமது தம்பி காசிநாராயண நாடாரின் மரவாடிக்கு அனுப்பினார். அங்கும் அரசியல் ஈடுபாடு குறையவில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்தின் வைக்கம் என்ற இடத்தில் மகாதேவர் ஆலயத்தைச் சுற்றி இருந்த தெருக்களில் ஈழவர், சாணார், புலையர், தீயர் முதலிய ஜாதியினர் நடக்கக்கூடாது என்ற விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டது. அதை எதிர்த்து டி.கே.மாதவன், கேசவமேனன், ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியை வெற்றிகரமாக நடத்த ஈ.வெ.ரா.வை அழைத்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த ஈ.வெ.ரா. வைக்கம் சென்று காந்திய நெறியில் (1924-25) சத்தியாக்கிரகத்தை நடத்தினார். இளைஞன் காமராஜும் வைக்கத்தில் நடந்த சத்யாக்கிரகப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டான். பின்னர் போடி நாயக்கனூர் கடையில் சிறிது காலம் பணியாற்ற அனுப்பப்பட்டான். எனினும் மாமன் கருப்பையா நாடார் காமராஜை மீண்டும் விருதுபட்டிக்கு அழைத்து வந்தார்.

கடைக்காக வாங்கப்பட்ட சுதேசமித்திரனை முழுமையாகப் படித்து முடித்துவிட்டுப் பகல் உணவை முடித்துக் கொண்டு, ஒரு தூக்கம் போட்டுவிட்டு மூன்று நான்கு மணிக்குக் காமராஜ் கடைக்குச் செல்லத் தொடங்கினான். வியாபாரம் அதிகம் இல்லாத மாலை வேளையில் கடைப் பொறுப்பைப் பையன்களிடம் ஒப்படைத்துவிட்டு உலவச் செல்வான். சில சமயம் ஞானம்பிள்ளை கடைக்குச் சென்று அங்குப் பேசப்படுவதைக் கேட்பது உண்டு. இந்தக் காலகட்டத்தில், சென்னை மகாணத்தில் பிராமணர் அல்லாதவர்களின் முன்னேற்றத்திற்காக 'ஜஸ்டிஸ் பார்ட்டி' தொடங்கப்பட்டது. விருதுபட்டியிலும் கீழைத் தெருவைச் சேர்ந்த பிரமுகர்களான செந்தில் குமார நாடார், சண்முக நாடார் முதலானோர் அந்தக் கட்சியில் சேர்ந்திருந்தனர். ஆகவே ஜஸ்டிஸ் பார்ட்டியைப் பற்றியும் தெரிந்துகொள்ளக் காமராஜ் விருதுபட்டியில் பிறர் செய்யும் கேலியையும் கிண்டலையும் பொருட்படுத்தாமல், பாரதியார் பாடலைப் பாடிக்கொண்டு, ஊர்வலம் செல்வது உண்டு. ஒருமுறை மதுரை சுந்தரம் பிள்ளையும் மேலானா சாகிபும் நடத்திய ஊர்வலத்தில் காமராஜும் கலந்து கொண்டான். கடைக்குச் சென்று வேலைகளை முடித்துவிட்டுக் கூட்டத்திற்குச் சென்றான். அதற்குள் கூட்டம் முடிந்துவிட்டதால், ஞானம்பிள்ளை கடைத் திண்ணைக்குத் திரும்பினான். அங்கே மௌலானா சாகிப், சுந்தரம் பிள்ளை, ஞானம்பிள்ளை, கோவிந்தசாமி நாடார் முதலானோர் உட்கார்ந்து, வரதராஜுலு நாயுடுவை ஆங்கில அரசு கைது செய்து, ராஜ துவேஷக் குற்றம் சாட்டி வழக்கு தொடுத்திருப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அதைக் குறித்து அறியும் ஆவலில், இளைஞன் காமராஜ் திண்ணையில் ஏறி உட்கார்ந்தான். ஞானம்பிள்ளை மிகவும் மகிழ்ச்சியடைந்து, தமக்கு வந்த காப்பியில் சரிபாதியைக் காமராஜுக்குத் கொடுத்தார். (தொடரும்)

## ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 7.3.1954

மறைவு: 1.12.2018



## பி.ராமச்சந்திரன் நாடார்.

பிரிவால் வருந்தும்

மனைவி:ஆர்.அருணாசலத்தாய்

மகள்:சுதாலட்சுமி.

மைத்துனர்:எ.கே.தெய்வராஜ்நாடார்

மருமகன்:டி.பொன்கலையரசன் .

ஆதிலட்சுமி, பி.அனிதா, பி.கபிலேஷ், டி.ஜான்சன், ஜே.இந்துமதி, ஜே.ஹாசினி, ஏ.குணசேகரன், ஜி.தாமரைசெல்வி, ஜி.தனுஷ்கா, ஜி.பிரியதர்ஷினி.






# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

**பிற்காலச் சோழர் ஆட்சியின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட சோழர் நிலை**

**சோழன் விசயாலயன் (கி.பி 846-881)**

கி.பி.9ம் நூற்றாண்டின் இடையில் சோழ மண்டலத்தின் தென்பகுதி பாண்டியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதும், அதனைத் திரும்பக் கைப்பற்றுவதற்கு பல்லவர், கங்கர் முதலானோர் துணை கொண்டு விசயாலய சோழன் முயன்றிருத்தல் வேண்டும் என்பதும், ஆனால் அம்முயற்சியில் இவன் வெற்றி பெறவில்லை என்று தெரிகிறது. பின்னர் கி.பி.862ம் ஆண்டில் அரிசிலாற்றங்கரையில் நடைபெற்ற போரில் பல்லவ மன்னனாகிய நிருபதுங்கவர்கனும் இலங்கை வேந்தனாகிய இரண்டாம் சேனனும் ஒருங்கு சேர்ந்து மாறவர்மன் பரச்சக்ர கோலாகலனைத் தோற்றோடச் செய்தனர். இரண்டாம் வரகுணபாண்டியன் கி.பி.880ம் ஆண்டில் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு சோனாட்டிற் புகுந்தான். அந்நாட்டில் காவிரியாற்றிற்கு வடக்கேயுள்ள மண்ணி நாட்டு நகரங்களுள் ஒன்றாகிய இடவை வரகுண பாண்டியனால் தாக்கப்பட்டது.

பல்லவன் அபராஜிதவர்மனும் பாண்டிய மன்னனை எதிர்ப்பதற்கு பெரும் படையுடன் புறப்பட்டான். கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதியும் தன் நண்பனாகிய அபராஜித வர்மனுக்கு உதவும் பொருட்டுப் படை திரட்டிக் கொண்டு, சோழ நாட்டிற்கு விரைந்து வந்தான். எனவே சோழன், பல்லவன், கங்கன் ஆகிய மூவேந்தரும் ஒருங்கு சேர்ந்து பாண்டி வேந்தனை எதிர்த்தனர். மண்ணியாற்றின் வடகரையிலுள்ள திரும்புறம்பயத்தில் பெரும் போர் நடைபெற்றது. பல்லவ மன்னனுக்கு உதவி புரிய வந்த கங்க அரசனாகிய முதலாம் பிருதிவிபதியும் பெரு வீரத்துடன் போர் புரிந்து அபராஜித வர்மன் வாகை சூடி மகிழும்படி செய்தான். அத்தகைய பெருவீரன் போர்க்களத்தில் இறுதியில் கொல்லப்பட்டான். எனினும் வரகுண பாண்டியன் தோல்வியுற்றுச் சோழ நாட்டை விட்டு ஓடும் நிலையை எய்தினான். ஆகவே திருப்புறம் பயம் பெரும் போரின் பயனாக பாண்டியர் முதற் பேரரசின் வலிமையும், பல்லவர் வலிமையும் குறைந்து போயின; சோழர் முடி மன்னராகிச் சோழ மண்டலம் முழுவதையும் தம் ஆணை செல்லுமாறு ஆட்சிபுரியும் பேறு பெற்றார்.

**தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.**

எனவே பல்லவன் ஆட்சியும் பாண்டியர் ஆட்சியும் சோனாட்டில் சிறிதுமின்றி ஒழிதற்கும், சோழரது ஆட்சி மீண்டும் நிலை பெறுதற்கும் ஏதுவாயிருந்த இத்திருப்புறம்பயப் பெரும் போர் தமிழக வரலாற்றில் முதன்மையான இடம் பெறுதற்குரிய ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். திரும்புறம் பயத்தில் நடைபெற்ற பெரும் போரின் பயனாகச் சோழர் பேரரசு கி.பி.880ம் ஆண்டில் தோன்றிற்று.

**முதல் ஆதித்த சோழன் (கி.பி.871-907)**

இவன் தன் தந்தை விசாலய சோழன் கி.பி.881ல் இறந்தவுடன் சோழ நாட்டில் முடிசூடி அதன் ஆட்சியை ஏற்றுக் கொண்டனன். இவன் தந்தை பரகேரியாதலனின் இவன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து கொண்டு அரசாண்டான். கி.பி.891ஆம் ஆண்டில் அதற்கடுத்த ஆண்டிலாதல் ஆதித்தன் அபராஜிதவர்மனை வென்று தொண்டை மண்டலத்தை கைப்பற்றித் தன் ஆட்சிக்கு உட்படுத்தியிருத்தல் வேண்டும் என்பது நன்கு வெளியாகின்றது. யானை மேலிருந்து கொண்டு போர் புரிந்த அபராஜித வர்மன் மீது ஆதித்தன் பாய்ந்து அவனைக் கொன்றான். ஆதித்தன் கொங்கு நாட்டை வென்று கைப்பற்றிக் கொண்டான்.

ஆதித்த சோழன் கொங்கு மண்டலத்தை வென்று அங்கிருந்து பொன் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பல முகட்டை அப்பொன்னால் வேய்ந்த செய்தியை உறுதிப்படுத்துகின்றன. கி.பி.9ம் நூற்றாண்டின் இறுதியில் சேரன், சோழன், கங்கன் ஆகிய மூவேந்தரும் உற்ற நண்பர்களாயிருந்தனர். இனி இவ்வாதித்த சோழன் காவிரியாற்றின் இரு மருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடும்பித்தான். இவ்வேந்தர் பெருமானுக்கு இரு மனைவியர் இருந்தனர். 1.இளங்கோப்பிச்சி, 2.திரிபுவனாமாதேவி என்போர். ஆதித்த சோழனுக்கு, பராந்தகன் கன்னரதேவன் என்ற இரு புதல்வர் உண்டு. அவர்களுள் பராந்தகனே இவனுக்குப்பிறகு பட்டம் பெற்றவன்.

சித்தூர் ஜில்லாவில் திருக்காளத்திற்கு அன்மையிலுள்ள தொண்டைமான் பேராற்றூரில் 908ம் ஆண்டில் ஆதித்தன் இறந்தனன் என்று தெரிகிறது. அவ்வூர் இக்காலத்தில் தொண்டை மாநாடு என்று வழங்கப் பெறுகிறது. (தொடரும்)


**Velan Kraft House (P) Ltd.**

**Raw Material Suppliers To Paper Mills - Since 1972**



**R.Santhana Krishnan Director**

Ad.off:2-C, First Main Road, Shastri Nagar, Adyar, Chennai-600 020.

Mobile: 9840817442, 99625 17442, 80123 17442 E-mail:Velankraft@yahoo.com

Web:www.velankraft.com



S.K.இராகவன் **இராஜா ஏஜென்சி**

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89

**Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824**



**ஸ்ரீ கெஸ்ட் ஹவுஸ்**

**SHREE GUEST HOUSE**

A/c & Non A/c Rooms Available. 9444683121. 9444180067.

57, East Raja Street, Mamallapuram, - 603104, Kanchipuram District.

New Happy Rewinty, 37, ஒத்தவாடை, நியர் பீச் ரோடு, 9443778291, 7338898291.

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

**வரனின் சங்கர்ப்பம்:-**

எந்தக் காரியத்தையும் செய்வதற்குமுன் அதற்கான எண்ணம் மனதில் உருவாகவேண்டும். உருவான எண்ணத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற திடமான உறுதி அதனைத் தொடர வேண்டும். அதன்படி அக்காரியத்தை செயலில் நிறைவேற்றி வைக்க வேண்டும். இம்மூன்றையும் உள்ளடக்கியதுதான் சங்கற்பம் செய்வது என்பதன் பொருள். எந்த ஒரு நல்ல காரியத்தை செய்ய தொடங்குமுன் அதை செய்து முடிப்பதாக வைராக்கியம் பூணுவதே இக்கிரியையின் கருத்து. இதன்படி வரன் தனது திருமண காரியத்தில் இறங்கி தனக்கென குறிப்பிட்ட மங்கை நல்லாளை மணந்து கொள்வதில் இறங்கியதாகவும் அவ்வாறே செய்து முடிக்க உறுதி பூணுவதாகவும் தெரிவித்து சங்கற்பம் செய்கிறான். சங்கற்பத்தை அடுத்து மணமேடையில் அமைக்கப்பட்டிருக்கும் விநாயகர், பூரண கும்பம் ஆகியவற்றிற்கு பூஜையை நிறைவேற்றுகிறான். இதற்குள் கட்டியம் கூறுபவன் "மாப்பிள்ளை முதலாளி மணவறைக்கு வந்து விட்டார்கள்" எனவும் மாப்பிள்ளை பிள்ளையார் பூஜை செய்கிறார் எனவும் அறிவிக்கிறான்

இது முடிந்ததும் வரனின் கையில் காப்புக் கட்டுதல் அல்லது கங்கணம் கட்டுதல் நடைபெறுகிறது. மஞ்சள் துண்டு ஒன்றை நூலில் இணைத்து வரனின் வலது கை மணிக்கட்டில் கட்டுவதே இக்கங்கணம் கட்டுதல் ஆகும். இதன் மூலம் கூட்டத்தினுள் இவன்தான் மணமகன் என்பதை மற்றையோர் சொல்லாமலே எளிதில் தெரிந்து கொள்ளலாம்

அவன் கங்கணம் கட்டிக் கொள்வதால் பெரியோர்கள் தீர்மானித்த உத்தம ரத்தினத்தை தன் சகதர்மிணியாக ஏற்றுக் கொண்டு குடும்ப காரியங்களை நடத்தியே தீருவேன் என சுய நிர்ணயம் செய்து கொள்கிறான். மணவினை முடியும் வரை இதர காரியங்களில் அவன் ஈடுபடுவதற்கில்லை. அவன் இவ்வாறு செய்து கொள்வதற்கு மற்றையோர் பாதுகாப்பு கொடுப்பதால் அதற்குக் காப்பு கட்டுதல் என்று பெயர். எவ்வித இடைஞ்சல்களும் அவன் திருமண காரியத்தில் ஏற்படலாகாதென்று ரட்சிக்கும் படியும் கட்டப்படுவதால் இதற்கு ரட்சாபந்தனம் எனவும் பெயர். இப்பணிக்கு மஞ்சளையே கட்டுவதுதான் நியதி. மஞ்சள் மங்கலப் பொருள் மட்டுமல்லாமல் சில விஷங்களைப் போக்கி அணுக விடாது தடுக்கும் சக்தியும் படைத்தது

ஆடவனை சிவனின் அம்சமாகவும் வலது பாதிக்குரியவனாகவும் கொண்டு மணமகனுக்கு கங்கணத்தை வலக்கரத்தில் கட்டுகிறார்கள். மணமகளோவெனில் அவளை சக்தியின் அம்சமாகவும், இடது பாதிக்கு உரியவளாகவும் கொண்டு அவளது இடக்கரத்தில் கங்கணம் கட்டுவதே முறை. இதனால் ஒருவன் தனது திருமணத்திற்குப் பின்புதான் முழு மனிதனாகிறான். தெய்வீகத் திருமணத்திற்குப் பின்னரே அவன் இல்லற வாழ்க்கையில் இறங்குவதற்குரிய தகுதியடைகிறான் என்பதும் இதன் விளக்கம்

**தாயாதிகள் அனந்தரம் :-**

இச்சடங்கு முடிந்ததும் கட்டியம் கூறும் குடிமகன், "ஐயா மாப்பிள்ளையின் தாயாதி சொக்காரர் அனந்தரம் செய்ய வாருங்கள்" எனக் கூவுகிறார். தாயாதிகள் என்பவர் வரனின் தகப்பன், பாட்டன், முப்பாட்டன் வழித்தோன்றிய பரம்பரை வாரிசுகள் ஆவர். கட்டியக்காரன் இவ்வாறு அழைத்ததும் பெரியவரும் சிறியவருமாய் உள்ள ஆடவர்கள் ஒவ்வொருவராய் எழுந்து அரசிலையும் பருத்தி விதையும் கலந்த நீருள்ள பாத்திரத்திலிருந்து அரசிலையை தம் கையால் கிள்ளி மணமகனுக்கு ஆரத்தி சுற்றுகிறார்கள். இச்சம்பிரதாயம் அங்கு பிரசன்னமாக இருப்பவர்களுக்கு அனந்தரம் செய்பவர்கள் யாவரும் மணமகனின் தயாதிகள் "சொக்காரர்" என்று காட்டும் அறிமுகப்படலமாகும்

இத்துடன் மணமகன் எழுந்து புறத்தே வீற்றிருக்கும் தாய் மாமனுக்குப் புது வஸ்திரம், அரிசி, தேங்காய் முதலிய சன்மானப் பொருட்கள் வழங்கி அவனிடம் ஆசிபெறுகிறான். தாய் மாமனும் இத்தருணத்தில் மணமகனுக்கென தான் தயாராய் கொணர்ந்த பட்டு வஸ்திரத்தினால் தலைப்பாகை கட்டுவித்து அவனுக்கு மோதிரமிட்டு, மலர்மாலை சூட்டி தலையில் அட்சதை தூவி, ஆசி வழங்குகிறான். மணமகன் மணப்பந்தலை நோக்கிப் புறப்படு முன்னரே பட்டம் சூட்டும் கிரியை நடைபெற்றிருப்பின் இப்பகுதி நடைபெறாது. பிணிந்து நின்ற மணமகன் நம்பியின் தலைமீது தாய்மாமன் அட்சதை தூவி நெற்றியில் திருநீறு அணிவித்து மண வேளையில் தரிக்க வேண்டிய முகூர்த்தப் புத்தாடைகளை அவன் கையில் வழங்கி அப்புத்தாடைகளை புனைந்து வரும்படி அவனை அழைத்துச் செல்கிறார்.

**மணப்பெண்ணின் மாமன் சடங்கு:-**

மணமகன் முகூர்த்தப் புத்தாடை புனைய உள்ளே சென்றதும் மணப்பெண்ணின் தாய்மாமன் மேடைக்கு அழைக்கப்படுகிறார். இவரும் வரனின் தாய் மாமனைப் போலவே காப்பு கட்டுதல் முதலியன முறைப்படி செய்து மணமேடையின் பக்கத்தில் உள்ள ஆசனத்தில் அமருகிறார். மணப்பெண் மேடைக்கு அழைக்கப்படுகிறாள்

**மணமகள் மேடைக்கு வருதல்:-**

மணப்பெண்ணின் தாய்மாமன் அப்பால் அமர்ந்ததும் மணமகளை வரனின் சகோதரி அல்லது அவன் குடும்பத்தில் உள்ள சுமங்கலி ஒருத்தி மணமேடைக்கு அழைத்து வந்து கிழக்கு முகமாக அமரச் செய்கிறாள். இதனைத் தொடர்ந்து மணமகனுக்கு நடைபெற்றதைப் போலவே சங்கற்பம் இடக் கரத்தில் காப்புக் கட்டுதல் விநாயகர் பூஜை முதலியன நிறைவேறுகின்றன

**பெண்ணின் தாயாதிகள் அனந்தரம்:-**

மேற்கூறியச் சடங்கு நிறைவேறியதும் கட்டியம் கூறுபவன் "ஐயா பெண் வீட்டு தயாதிகள் சொக்காரர் அனந்தரம் செய்ய வாருங்கள்" என்று அழைக்கிறார். உடன் பெண்ணின், தகப்பன் பாட்டன் வழி தயாதிகளாய் உள்ள ஆடவர்கள் ஒருவர் பின் ஒருவராக வரனுக்குச் செய்தது போல் வதுவிற்கும் ஆரத்திச் சுற்றி தம்மை பெண்ணின் குடும்பத்தார் என அச்சபைக்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். இப்பெண்ணின் திருமணத்திற்குப் பின் அவள் மணமகனின் குடும்பத்தைச் சேர்ந்தவள் ஆகிவிடுவதால் பெண்ணின் தாயாதிகள் அவள் மீதிருந்த தமது குடும்ப உரிமையை கடைசி முறையாக சபைக்குத் தெரிவித்து அவளை மணமகன் குடும்பத்திற்கு மாற்றி அனுமதி கொடுப்பதாகவும் இக்கிரியை நடைபெறுகிறது

**பெண்ணின் மாமன் ஆசீர்வாதம்:-**

பின்னர் மணமகள் எழுந்து தனது தாய் மாமனைப் பணிகிறாள். அவனும் அவளுக்கு அர்ச்சதையிட்டு, மாலைசூட்டி மேற்கூறிய முறைப்படி நல்லாசி வழங்கி அனுப்புகிறான். இத்தருணத்தில் வரன் வீட்டார் மணமகளுக்கென தயாரித்த முகூர்த்தப் புத்தாடை அணிகட்கு சபையோரிடம் நல்லாசிகள் பெற்று தாய்மாமன் ஆசியும் வாங்கி மணப்பெண்ணிடம் கொடுத்தனுப்புவதும் உண்டு. எனவே மணப்பெண்ணும் முகூர்த்தப்புடவை என்னும் ஸ்ரீ கூறைப்புடவையணிந்து தன்னை மணமகளாய்த் திகழச் செய்வதற்கென தனியறைக்குள் நுழைகிறாள்

**மாதொரு பாகனார் பூஜையும் நவக்கிரக வழிபாடும்:-**

மணமுடி புனைந்த மணமகன் மீண்டும் மணமேடையை அடைகிறான். இங்கு சக்தியாகி சிவமாகித் தனிபெரும் மூர்த்தியாகி தையலிடம் கொண்ட தனிப்பரம் பொருளுக்கு வழிபாடு நடக்கிறது. இதன் மூலம் திருமண வாழ்வில் இறங்கும் புத்தம் புது மணமக்கள் ஈருடலும் ஓருயிருமாய் வாழ வேண்டும் என்பதே இதன் கருத்து விளக்கமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் மணமகன் மணமேடையின் இடப்புறத்தில் அமருகிறான். மணமகளோ அவனுக்கு வலப்புறத்தில் அமருகிறாள். அவ்வாறு அமரும் போது அவளை அந்நிய மாதாகவே அங்க அமரச் செய்கிறார்கள். திருமணத்திற்குப் பின்னரே மாதொருத்தி தனது கணவனின் இடப்பாகத்திற்கு உரியவள் ஆகிறாள். தையலிடம் கொண்ட தம்பிரானின் தத்துவத்தை இது காட்டா நிற்கும். எனவே ஆடவனின் வலப்புறத்தில் ஏறி உட்காரும் எந்தப் பெண்ணும் அந்நியவளாகவே கொள்ளுதல் முறை. - தொடரும்..................

GP

# கோபால் பிளாஸ்டிக்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33



S.இராஜகோபால்

## RS பிளாஸ்டிக்

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்

நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.



S.ஜெயராஜ்

---

**நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான**

# நாடார் விவாகம் திருமணத் தகவலகம்



**36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202**
**செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.**
nadar vivahammatrimony / www.nadarvivaham.in/ Google Play
புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.50 மாலை 5.00 -6.00 ஞாயிறு விடுமுறை.
இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

## தென்றல் திருமணத் தகவலகம்

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.
முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,

---



மரந்தலை மாடசாமி துணை

**செல்:9840685266, 9380879313.**



# MARS

## மார்ஸ் திருமண தகவல் மையம்

சென்னையில் 30 வருடமாக பெரும் தொழில் அதிபர்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், அனைவருக்கும் நிறைய திருமணங்கள் நடத்தி கொடுத்தவர் இந்து நாடார், கிறிஸ்துவ நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் அனைத்து மாவட்ட நாடார்கள் தொடர்புகொள்ளவும்.

**வேம்பார் கனகராஜ் நாடார்.**

**வீடு, மனை, தோட்டம் வாங்க விற்க அணுகவும்.**

நெ.25, நேதாஜி தெரு, அன்னை இந்திரா நகர், மூலச்சத்திரம், சென்னை-51,

---



N.R.N.Group

போன்:044-26790587

# பிரியா டிப்போ

**கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.**
2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.



---

SSS

Cell:9884687675, 9488491671.

அய்யா துணை



# திருமண தகவல் மையம்

**அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.**

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.



கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

போன்:9443742889. 7708701159.

# சரவணன் ரியல் எஜென்சிஸ்

## காமாட்சி ஸ்டோர்ஸ்



**தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்**

**நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.**

# EAGLE PRESS

## "DIARY HOUSE"

## Ph : 25952694

**35, M.S. Koil Street, Chennai-13.**
**Tamil Nadu**
**email: eagle@giamd01.vsnl.net.in**
**Website : www.eaglepressgroup.com**

# ஸ்ரீ முருகன் ஜோதிட நிலையம்



வாக்கிய பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் கணித்து தரப்படும். உங்கள் எதிர்காலம், படிப்பு, உத்தியோகம், தொழில், திருமணம் எப்போது என்ற நிலை அறிய உடனே அணுகவும். ஜாதக ரீதியாக தோஷ நிவர்த்தி பரிகாரங்கள் சொல்லப்படும். மனைபடி வாஸ்து சாஸ்திரமும் பார்க்கப்படும். உங்கள் மகளுக்கோ, மகனுக்கோ உடனே திருமணம் நடைபெற எங்களை நாடுங்கள். R.C, CSI மற்றும் இந்து நாடார், படித்த படிக்காத VIP பட்டதாரிகள், விதவைகள், ஜாதகங்கள் ஏராளமாக உள்ளன. இது அனைத்து நாடார் சமூகத்துக்கு மட்டும். ஆலோசகர் P.R.ராஜகோபல் நாடார், சேவைக் கட்டணம் நேரில்.

# ஸ்ரீ முருகன் திருமண தகவல் நிலையம்

25/1, புதிய எண்:16, கிரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. செல்:9841239324.



# ஜெயமுருகன் சிக்கன்
# & மட்டன் ஸ்டால்





89, கே.எச்.ரோடு, தி.நகர்,
சென்னை-17.
போன்:2814 3642.



R.வெங்கடேசன்



**அரிசி மொத்த வியாபாரம்.**

**செல்:9840994451, 26380752 / 73.**

# சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்



286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

# செல்வராஜ் சூப்பர் மார்கெட்

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com




GP **கோபால் பிளாஸ்டிக்**

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33


S.இராஜகோபால்

**RS பிளாஸ்டிக்**

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.


S.ஜெயராஜ்

நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!

நியூ **நிதில் & கோ**

தரமான கட்டில், பீரோ, மெத்தை, இதர பர்னிச்சர்கள் வாங்க சிறந்த இடம்..
போன்:044-25962323, 044-42165485





NEW NITHIL & CO




**Whole Sale & Retail**
**Steel & Wood Furniture Show Room**
**No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021**



# தமிழக நாடார் மேட்ரிமொனி

SINCE 2007

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது. திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 2.எம் மதமும் சம்மதம்

என் தந்தையின் பிறந்த நாள் ஆகஸ்டு 4 ஆகும். அதனால், அவர் சென்னையில் இருந்தாலும், கள்ளிக்குளத்தில் உள்ள ஆலயம் சென்று, பனிமாதாவை வணங்கிவிட்டு வருவார்கள். அந்த நாளில் பனிமாதா திருவிழா நடைபெறும் நாங்கள் அந்த திருவிழாவில் குடும்பத்தோடு கலந்து கொள்வோம். அப்போது, என் தந்தையின் சகமாணவ நண்பர் வி.சி.சண்முகம் அவர்கள் வீட்டில்தான் தங்குவோம்.



இவ்வாறு சகமாணவரான வி.சி.சண்முகம் அவர்களோடு நட்பு கொண்டிருந்தார். அங்கே அவர்கள் இருவருக்கும் உள்ள நட்பின் உயரம், ஆழம், அகலத்தை என்னால் காண முடிந்தது.

என் தந்தையைப் போல் என் இளமைக்கால நண்பர்களையும், உதவி செய்த அன்பு உள்ளங்களைப் பார்க்கும்போது, நானும் அவ்வாறு உதவி செய்வேன். இப்படி, என் வாழ்க்கையில் என் தந்தையின் வழி ஒரு சிறந்த பாடமாக என்னை வழி நடத்துகிறது என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

## 3.ஆள்பாதி ஆடைபாதி

என் தந்தை அடிக்கடி சொல்வார்கள், வசதி குறைவாக இருந்தாலும் சரி, அல்லது வசதியாக இருந்தாலும் சரி, வசதியே இல்லாத வறுமைகோட்டிற்குக் கீழே இருந்தாலும் நாம் எப்போதும், எந்த ஒரு நிகழ்ச்சிக்கு செல்வதென்றாலும், தான் உடுத்தியிருக்கும் ஆடையை எவ்வளவுக் கெவ்வளவு நேர்த்தியாக உடுத்துவது மிகவும் நல்லது. ஔவையார் ஆத்திச்சூடியில் கூறியுள்ளதைப் போல் "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" - என்று ஔவையாரின் பொன்மொழிக்கேற்ப, ஒருவர் தான் உடுத்தும், ஆடையைப் பொருத்துத்தான் அவர் எப்படிப்பட்டவர் என்பது தெளிவாகத் தெரிந்துவிடும்.

உதாரணத்துக்கு:-

ஒரு மருத்துவமனையில் அங்குள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு உரிய வெள்ளாடையை அணிந்து கொண்டு, மருத்துவம் பார்க்கும்போது, அவர்களைக் காணும் நோயாளிகள் டாக்டர்கள், நர்ஸ்சுகள் மீது மதிப்பும் நம்பிக்கையும் வைத்து, அவர்கள் சொல்வதைக் கேட்பார்கள். அப்படி அல்லாமல் அவர்கள் ஒரு சாதாரணமான உடையில் வந்து பணிசெய்வார்களானால், அவர்களுக்குள்ள மதிப்பும், மரியாதையும் குறைவாகவே நோயாளிகளின் மனதில் தோன்றும். அதைப்போல், அந்த மருத்துவர்களுக்கும், அவரவர் பதவிகளுக்குரிய உடை, உடுத்தி வரும் போது, அவர்களுக்குள்ளே ஒரு புத்துணர்ச்சியும், தன் தொழில் மீது நம்பிக்கையும் கொண்டு உற்சாகத்தோடு செயல்படுவார்கள்.

அவ்வண்ணமே,

ஒரு நீதிபதி இருக்கிறார் என்றால், அவருக்குண்டான நீதிபதி உடையில் வரும்போது, ஒரு கம்பீரமும், தான் விசாரிக்கப் போகும் வழக்கின் மீது மிகுந்த கவனமும் ஏற்படும். நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்கறிஞர்களுக் கும் நீதிபதியின் மீது ஒரு பக்தியும், மரியாதையும் ஏற்படும். அதைப்போலவே, காவல்துறையில் பணியாற்றும் போலீஸ் அதிகாரி அவருக்குரிய மிடுக்கான காக்கிச்சட்டை சீருடையில் வரும்போது, பொதுமக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படும். மேலும், சட்டதிட்டங்களின்படி நடக்கவேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வும் பொதுமக்களுக்கு ஏற்படும்.

ஆள்பாதி ஆடைபாதி என்ற நடைமுறை "எடுத்துக்காட்டுகளை" இவ்வாறெல்லாம் என் தந்தையார் அவர்கள் சொல்வார்கள், ஒரு வியாபாரி அல்லது தொழில் செய்யும் நபரோ, எந்த ஒரு நிகழ்ச்சிக்கோ அல்லது விசேஷங்களுக்கோ, விழாக்களுக்கோ செல்லும்போது அவர்களது பாணியில், மேனாட்டு உடையான கோட்டு சூட்டும் அணிந்து சென்றால்தான், அதற்குரிய மதிப்பும் மரியாதையும் கிடைப்பதோடு அவர் ஒரு தொழில் நிறுவனத்தின் அதிபர் என்பதை அவ்விழாவுக்கு வந்திருப்பவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

என் தந்தையார் அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில், ஒரே ஒரு கோட்டு, சூட் வைத்துக் கொண்டு, அந்த உடையிலேயே சென்றுவருவார்கள். ஆம்! என் தந்தையார் வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்களுடன் அருமைச்சித்தப்பா வி.ஜி.சந்தோசம் அவர்களும் சென்று வருவார்கள், பார்பவர்கள் அவர்களை "இரட்டையர்" என்று வர்ணிப்பார்கள்.

ம.பொ.சி.அறக்கட்டளை மற்றும் பாரதிய ஜனதா கட்சி தமிழ் இலக்கிய பிரிவு இணைந்து நடத்திய ம.பொ.சி.விருதுகள் வழங்கும் விழாவில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் விஜிபி குழுமத்தின் நிறுவனருமான டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்கள் எழுதிய மாமனிதர் ம.பொ.சி.ஆங்கில புத்தகத்தை தமிழக அரசின் முன்னாள் அமைச்சர் எச்.வி.ஹன்டே அவர்கள் வெளியிட, ம.பொ.சி.அறக்கட்டளையின் நிறுவனர் திருமதி மாதவி பாஸ்கரன் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். அருகில் நூலாசிரியர் வி.ஜி.சந்தோசம், பா.ஜ.க.தமிழ் இலக்கியப்பிரிவின் மாநிலத் தலைவர் திரு.மு.ஆதித்யா, எழுத்தாளர் பி.பிரபாகர், டாக்டர் ஜே.எஸ் ராஜ்குமார், பத்திரிகையாளர் திருமதி லோகநாயகி, ம.பொ.சியின் பேரன் திரு.செந்தில் ம.பொ.சி.ஆகியோர் உடன் உள்ளனர்.

# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

## அய்யாவின் அன்புப் பரிசு

-ஐ.சண்முகநாதன்

### கென்னடி கொலை

1963ம் ஆண்டு நவம்பர் 22-ந்தேதி இரவு 12 மணி இருக்கும். டெலிபிரிண்டரில் ஏதோ முக்கிய செய்தி வருகிறது என்று அறிவிக்கும் விதமாக தொடர்ந்து மணி ஓசை எழுப்பியது. ஓடிப் போய் பார்த்தேன்.

'கென்னடி சுடப்பிட்டார்' என்பதே அச்செய்தி.

உள்ளத்தையும், உடலையும் நடுநடுங்க வைத்த செய்தி.

"கென்னடியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகிறார்கள்."

"தலையில் குண்டு பாய்ந்திருக்கிறது."

"ஆபரேஷன் நடக்கப் போகிறது."

இப்படி ஒற்றை வரி செய்திகள், அம்பு போல் பாய்ந்த வண்ணம் இருந்தன.

செய்தித்துறையை பெரியஜயா கவனித்து வந்ததால், இதுபோன்ற முக்கிய செய்திகள் வரும்போது, எந்த நேரமாக இருந்தாலும் அவர்களுக்கு டெலிபோன் செய்து விவரம் தெரிவிப்பதும், தலைப்பை முடிவு செய்வதும் வழக்கம். அன்றைய தினம், அவர்கள் ரெயில் மூலமாக கோவைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். இப்போது இருப்பது போல் செல்போன் போன்ற வசதிகள் அப்போது இல்லை.

இதற்குள், டெலிபிரிண்டரில் நீண்ட அபாய மணி அடித்தது. எல்லோரும் ஓடினோம்.

"கென்னடி இறந்துவிட்டார்."

மீண்டும் மீண்டும் இந்த வரியே வந்தது.

படபடப்பை அடக்கிக்கொண்டு, சின்னஜயா அவர்களுக்குப் போன் செய்தேன்.

கென்னடி படுகொலை செய்யப்பட்டார் என்பதை அறிந்து ஐயா அவர்களும் திடுக்கிட்டார்கள்.

### புதிதாக அச்சிட்டோம்

அப்போது சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 4 ஊர்களில் மட்டுமே தினத்தந்தி பதிப்புகள் இருந்தன. கோவையில் அலுவலகம் தொடங்கப்பட்டு 3 மாதங்கூட ஆகவில்லை. மற்ற ஊர்களுக்கெல்லாம் மாலையிலேயே அச்சிடப்பட்டு, ரெயில்கள் மூலமும், பஸ்கள் மூலமும், வேன்கள் மூலமும் பிரதிகள் அனுப்பப்பட்டு வந்தன.

அடுத்து நான் என்ன செய்யவேண்டும் என்பதை ஐயா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்.

"கென்னடி செய்தியுடன்தான் எல்லா ஊர்களுக்கும் பேப்பர் போகவேண்டும். எல்லா ஏஜெண்டுகளுக்கும் தந்தி அனுப்பி, வழக்கம் போல் வந்துள்ள பிரதிகளை விநியோகிக்க வேண்டாம், கென்னடி கொலை செய்தியுடன் புதிய பிரதிகள் வருகிறது என்று தெரிவித்து விடுங்கள்.

"சர்க்குலேஷன் ஆட்களை வரச்சொல்லி, நிறைய வேன்களை ஏற்பாடு செய்து, எல்லா ஊர்களுக்கும் புதிய பேப்பரை அனுப்பச் சொல்லுங்கள். இதுவரை அடித்த பிரதிகளை 'வேஸ்ட்'டில் போட்டுவிடச் சொல்லுங்கள்."

-எவ்வித சந்தேகத்திற்கோ, விளக்கத்திற்கோ இடம் வைக்காமல் எல்லாவற்றையும் ஐயா தெளிவாகச் சொல்லிவிட்டார்கள்.

நான் மின்னல் வேகத்தில் செயல்பட்டு, ஐயா அவர்கள் கூறிய அனைத்தையும் செய்து முடித்தேன்.

நானும், மற்ற துணை ஆசிரியர்களும் விடிந்த பிறகுதான் வீட்டுக்குச் சென்றோம்.

மறுநாள் காலை, பெரிய ஐயா அவர்கள் கோவை போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் எந்த ஊருக்குப் போனாலும், ரெயில் நிலைய புத்தகக் கடையில் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பது வழக்கம்.

வழக்கம் போல் பத்திரிகைகளை வாங்கினார்கள். முதலில் தினத்தந்தியை எடுத்துப் பார்த்தார்கள். 'கென்னடி கொலை' என்ற எட்டுக்காலச் செய்தியைப் பார்த்து திடுக்கிட்டார்கள். சென்னையில் இருந்து வந்த எந்த ஆங்கிலப் பத்திரிகையிலோ, தமிழ்ப் பத்திரிகைகளிலோ இந்தச்செய்தி இல்லை. அது மட்டுமா? கோவையிலேயே பிரசுரமான மில் அதிபர் ஒருவரின் தமிழ்ப் பத்திரிகையிலும் இச்செய்தியைக் காணோம்!

இதனால் நாம் பிரசுரித்துள்ள செய்தி சரிதானா என்ற சந்தேகம்கூட பெரியஜயா அவர்களுக்கு வந்துவிட்டது! அலுவலகத்துக்குப் போன் செய்து விசாரித்தார்கள். செய்தி உண்மை என்பது தெரிந்தது.

இவ்வளவு பெரிய முக்கிய செய்தியை உள்ளூர் பத்திரிகை எப்படித் தவறவிட்டது என்று விசாரிக்கச் சொன்னார்கள். விசாரித்ததில் கிடைத்தத் தகவல்.

முந்தின நாள் மாலை, நமது எல்லைப் பகுதியைப் பார்வையிடச் சென்ற சில தளபதிகள், விமானம் நொறுங்கி விழுந்து இறந்து விட்டார்கள். இதைவிட வேறு என்ன முக்கியச் செய்தி இனிமேல் வரப்போகிறது என்று கருதி, இரவு 11 மணிக்கே செய்திப் பிரிவினர் வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டார்கள். அதனால், உலகத்தையே உலுக்கிய கென்னடி படுகொலை செய்தி அந்தப் பத்திரிகையில் வரவில்லை.

இரவு முழுவதும் கண் விழித்து வேலை பார்த்த எங்களுக்கெல்லாம் ஐயா அவர்கள் கைநிறையப் பரிசு வழங்கி பாராட்டினார்கள். (தொடரும்)




# கிறிஸ்துமஸ் பரிசு

## சிறுகதை........

வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



லீலா ஸ்டீபன்.

அந்த மாளிகை வீட்டின் மாடியில் தங்களது அறையில் அலெக்சும், ஜெனிபரும் அருகருகே அமர்ந்து சுரத்தில்லாமல் பேசிக் கொண்டிருந்தனர். "நமக்குத் திருமணமாகிய பின் வரும் ஐந்தாவது கிறிஸ்துமஸ் விழா இது. அனைத்துச் செல்வங்கள் இருந்தபோதிலும் குழந்தைச் செல்வம் இல்லையே!" என ஆதங்கப்பட்டாள் ஜெனிபர். அலெக்சுக்கும் இதில் வருத்தம் உண்டுதான். அதோடு அவன் குடும்பம் கண்முன் வந்தது. அலெக்ஸின் தந்தை அந்த வளனார் கோட்டை ஊரின் பெரும் நிலக்கிழார். வெளிநாட்டில் தொழில் செய்து பெரும் பொருளீட்டியவர். கண்டிப்பும், கருணையும் உடையவர். ஊரில் ஒரு சூப்பர் மார்க்கெட் என்ற அங்காடியை நிறுவி பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கி அதை நடத்தி வருபவர். தாய் வின்ஸி, குடும்பத்துக்கேற்ற குணவதி. ஏழை, ஆதரவற்றோர் மீது பரிவுகாட்டி உதவும் பண்பாளர். அலெக்ஸ் வேளாண்துறையில் பொறியியல் பட்டம் பெற்றவன். தன் பரம்பரை நிலத்தில் விவசாயத்தில் நவீனமுறையைப் புகுத்தி தரமான மகசூலைப் பெற்று விவசாயப் புரட்சி செய்ய கிராமத்திலேயே தங்கி விட்டான். அவன் மனைவி ஜெனிபர் பக்கத்தூர் பண்ணையாரின் ஏகமகள். முதுகலைப் பட்டதாரி. பெரும் செல்வச் சிறப்போடு வாழ வந்த அவள் அறிவும் பொறுமையும் மிக்கவள்.

குடும்பத்தில் நிலவும் குழந்தை ஏக்கத்தைப் போக்கப் போகாத கோவில்கள் இல்லை. செய்யாத தானதர்மங்கள் இல்லை. கடவுள் கருணை கூடி வரவில்லை. நகரங்களிலுள்ள பிரத்தியேக மருத்துவமனைகளில் சிகிச்சை பல எடுத்தாகிவிட்டது. பலன் கிட்டவில்லை. ஆகவே ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும் ஆலோசனையை அலெக்ஸ் தன் தந்தையிடம் பக்குவமாக எடுத்துரைத்தான். அவர் அதை ஏற்கத் தயாரில்லை. "இத்தனை ஆஸ்திக்கும் வாரீசு ஒரு அநாதைக் குழந்தையா! என்னால் இதை ஏற்க முடியவில்லை. நீயும் எங்களுக்குப் சில ஆண்டுகள் கழித்தே பிறந்தாய். உங்களுக்கு வயதாகி விடவில்லை. பொறுத்திரு. இறைவனை நம்பு என முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் தந்தை.

ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் விழா அன்று ஏதாவது ஒரு ஆனாதை இல்லத்திற்குச் சென்று அங்குள்ளோருடன் சேர்ந்து கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவது இவர்களது வழக்கம். இந்த முறை ஒரு சிறுவர் காப்பகம் சென்று கொண்டாடத் திட்டமிட்டனர். அதன்படி "சிறுமலர்" காப்பகத்தின் அனுமதி பெற்று, கிறிஸ்துமஸ் அன்று மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்தனர். உரிய வேளையில் ஒரு "டெம்போவில் பிரியாணி, கேக், பட்டாசு, பரிசுப் பொருட்களுடன் அலெக்சும் ஜெனிபரும் காப்பகத்தை அடைந்தனர். எதிர்ப்பார்த்திருந்த சிறுவர்களுக்கு தங்கள் கையால் பிரியாணி வழங்கினர். பின்பு கேக் வெட்டி சிறுவர்களுக்கு ஊட்டியும் தாங்களும் உண்டு மகிழ்ந்தனர். பட்டாசுகளை இரவில் கொளுத்தும்படி கூறி. பரிசுப் பொருட்களையும் அளித்தனர். சில மணி நேரம் அவர்களுடன் பேசி , பாட்டுப்பாடி, ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இறுதியில் சிறுவர்கள் நன்றியுடன் விடைபெற, அலெக்சும், ஜெனிபரும் காப்பக நிர்வாகிகளுடன் விடை பெற்றுக் காரை நோக்கிக் நடந்தனர்.

"ஜெனி", நீ காருக்குள் உட்கார்ந்திரு, இதோ நான் பத்து நிமிடத்தில் வந்து விடுகிறேன். என்று மனைவியிடம் கூறிவிட்டு அலெக்ஸ் காப்பகத்துள்ளே சென்றான். சிறிது நேரத்தில் அலெக்ஸ் முன்னேவர, அவனைத் தொடர்ந்து ஒரு பெண் குழந்தையுடன் காப்பகத் தலைவி வந்தார். சந்தன நிறத்தில் சுருட்டைமுடி, கரும் திராட்சைக் கண்கள், ஆப்பிள் போன்ற கன்னங்கள் என அந்த குழந்தை அனைவரையும் கவரும் அழகு, அலெக்ஸ் குழந்தையை வாங்கி, இது நான் உனக்குத் தரும் கிறிஸ்துமஸ் பரிசு என்று கூறி ஜெனிபர் கையில் கொடுத்தான். அவள் குழந்தையைப் பாசத்தோடு வாங்கி முத்தமிட்டாள். இந்த குழந்தைக்கு ஒரு வயதாகிறது. இவளை அலெக்ஸ் முறைப்படித் தத்தெடுத்து, அதற்கானப் பராமரிப்புச் செலவையும் மாதா மாதம் தந்து விடுவார். எனத் தலைவி சொல்ல, வியப்படைந்த ஜெனிபர் நன்றியுடன் தன் கணவன் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

பரஸ்பர நன்றி நவிலலுடன் தம்பதியர் தலைவியிடம் விடை பெற்றனர். குழந்தையோடு காரில் பயணித்து வீட்டை வந்தடைந்தனர். துணிவை வரவழைத்துக் கொண்டு வீட்டின் உள்ளே சென்றபோது பெற்றோர் இவர்களை எதிர்பார்த்து கூடத்தில் அமர்ந்திருந்தனர். அலெக்ஸ் குழந்தையுடன் தந்தையிடம் செல்லவும் குழந்தை சட்டென்று தாவி பெரியவரிடம் சென்றது. அவரும் தன்னை மறந்தவராய் குழந்தையை வாங்கி முத்தமிட்டு, தனது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி குழந்தையின் கழுத்தில் அணிவித்தார் அம்மாவும் ஆசையோடு குழந்தையை வாங்கி ஆரத் தழுவி முத்தமிட்டாள். வீடே ஆனந்தத்தில் மூழ்கியது.

புதுவருடத்தில் குழந்தைக்குத் திருமுழுக்குக் கொடுக்க முடிவு செய்தனர். "என்ன பெயர் வைக்கலாம் என பெரியவர் கேட்க, அலெக்ஸ் பெயர் ரெடி என்றான். அப்பா உங்கள் பெயரின் முதல் எழுத்தான ஜெ என்ற எழுத்தும் அம்மா பெயரின் ஸி என்ற கடைசி எழுத்தும் சேர்ந்து "ஜென்ஸி" என்றான். வியப்போடு மகனை ஏறெடுத்துப் பார்த்த தந்தை அவனை வெகுவாகப் பாராட்டினார். "ஞானப்பெற்றோர்" எனத் தந்தை வினவ, "அதுவும் தயார்! சென்னையில் வசிக்கும் என் நண்பன் ராபினும் அவன் மனைவி பிரியாவும் தான். இன்பாம் பண்ணியாச்சி. அத்துடன் கனடாவில் வசிக்கும் தங்கை பவித்ராவுக்கும் தகவல் தந்து விட்டேன். குடும்பத்தோடு வந்து விடுவாள். என்று அனைத்தையும் விளக்கமாக சொல்ல, குடும்பமே குதூகலித்தது. அந்த இனிய நாளை அனைவரும் மகிழ்வோடு எதிர்பார்த்திருந்தனர். நாமும் எதிர் பார்ப்போமா?

இது கற்பனைக் கதை என்றாலும் இதன் கருத்து ஏற்புடையது. குழந்தையில்லாத தம்பதிகள், காலம் தாழ்த்தாமல் உரிய காலத்தில் ஒரு குழந்தையைத் தத்தெடுத்தால் அவர்களுக்கு வாரீசு கிடைத்த திருப்தி அத்துடன் ஒரு அனாதைக் குழந்தைக்கு வாழ்வளித்தப் பெருமையும் அவர்களுக்குச் சிறப்பும் மதிப்பும் தானே! அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!!

வாழ்க வளர்க !

உ

வீடு, மனை வாங்கவும், விற்பனை செய்யவும் அனுகலாம் வாங்க !!



ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்

ரியல் எஸ்டேட்



M.L. சுவாமி

No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.

Cell : 98410 74090 [94443 42707] RE - Invesments - Joint Ventures

## தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மிகச்சிறந்த செயல்பாடுகள்

-M.ஞானசேகர், தொழில் ஆலோசகர், 9566253929.

**சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு**

சுய உதவிக்குழுக்கள் வங்கிகளில் சேமிப்பு கணக்கை துவக்குவதின் மூலம் வங்கியுடனான இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். வங்கிகளில் பெறப்படும் கடன்கள் மூலம் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான ஊக்கத்தொகை**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தவும், அவற்றின் வழிகாட்டுதலின்படி இயங்கும் சுய உதவிக்குழுக்களுக்கு வாழ்வாதார செயல்பாடுகளை ஊராட்சி அளவில் மேம்படுத்திடவும் தமிழக அரசு ரூபாய் 1 லட்சம் வீதம் ஒவ்வொரு ஊரக அளவிலான கூட்டமைப்புகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனை நன்கு பயன்படுத்துகின்றனர்.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று அதனை சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களுக்கும் கடன்களை வழங்குகின்றன. வங்கிகளிடமிருந்து சுய உதவிக்குழுக்கள் பெற்று வரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் பெறும் கடன்கள் கூடுதல் நிதி ஆதாரமாக பயன்படுகின்றது. பல ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 1 கோடி ரூபாய் மற்றும் அதற்கும் அதிகமாகக் கடன்கள் பெற்று குறித்த நேரத்தில் திரும்பச் செலுத்திவருகின்றன. இதன் மூலம் பெண்கள் பெரிய அளவில் முன்னேறுகின்றனர். மாவட்ட தொழில் மையம் மூலம், முத்ரா, ஸ்டார்ட் அப் திட்டங்கள் மூலமும், சிலர் கடன் பெறுகின்றனர்.

**வங்கி முகவர்கள்**

வங்கிகள் இல்லாத இடங்களில் வங்கிச் சேவைகளை கொண்டு செல்ல, வங்கி முகவர்களை வங்கிகள் நியமிக்கின்றன. சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிர் வங்கி முகவர்கள் தேர்வு செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பல்வேறு வங்கிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் வங்கிகளை மக்கள் நெருங்கி வருகின்றனர். வங்கிகள் நன்கு உதவுகின்றன.

**சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்**

சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் சமுதாய ஒருங்கிணைப்பாளராக களப்பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு வேலை செய்ய தேர்வு செயயப்பட்டுள்ளனர். சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் வங்கி கடன் இணைப்பை கண்காணித்தல், கடன் வசூல், பொருளாதார கல்வி மற்றும் ஆயுள் காப்பீடு போன்ற நான்குவிதமான பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முக்கிய பணியாக சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு மற்றும் கடன் தேவைகளுக்கு உதவி செய்பவர். இவர்கள் வங்கிக்கும் மற்றும் சமுதாய மக்களுக்கும் இணைப்புப் பாலமாக செயல்பட்டு அனைத்து வங்கி சேவைகளையும் வழங்குவர். மேலும் கடனை திருப்பி செலுத்த உதவுவார்கள்.

**தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா**

திறன் மேம்பாடானது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் மூலம் பணியமர்வுடன் கூடிய தொழில்பயிற்சி ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. சுகாதாரம், தகவல் தொழில் நுட்ப சேவை, ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஓட்டுநர், ஆட்டோமொபைல், விருந்தோம்பல், வெல்டிங், கட்டுமானம் போன்ற துறைகளில் பெரும்பான்மையான திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

தீன்தயாள் உபாத்யா கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகுகளால் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. முகாம்கள் நடைபெறும் பொழுது தேவையான விபரங்களை வேலை தேடி வருபவர்களுக்கு வழங்கி அவர்களது கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் சரியான வேலையினை தேர்வு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

**ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதார திட்டம்**

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் மகளிருக்கு பயிற்சி வழங்க தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளை சார்ந்த மகளிர் பிற திட்ட இணைப்புகளின் மூலம் பயனடைந்துள்ளனர். பல லட்சம் பேர் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர். (தொடரும்)




S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A
Correspondent
Koilpillai Mat.Hr.sec.School
65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com



REVATHI LABEL PRINTERS
R.DHEVI 98414 41111, 99415 51111
Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumar Lables & Software Support.
2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.
Emaill: dhevi_rlp@yahoo.co.in

# இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் பயணங்கள்

**தமிழ்க் காவியமாய் குமரி அனந்தன்**


வை.ஜவஹர் ஆறுமுகம்
9442949655




"ஆறுமுகம், ஒரு முக்கியமான விஷயம். தனியாப் பேச கூப்பிட்டேன். இப்போது மத்தியில் இந்திரா காந்தி பிரதமர். இங்கே கருணாநிதி முதல்வர். மேலேயும், கீழேயும் ஆட்சியில் இல்லாமல் அரசியல் நடத்துவது சிரமம். அதனால் இந்திரா காந்தியுடன் பேசி ஸ்தாபன காங்கிரஸ் கட்சியை இந்திரா காங்கிரசுடன் இணைத்துவிட்டால் நல்லது. எதற்கு நமக்குள் சண்டை, இரண்டு கட்சிகள்? என்று நினைக்கிறேன். ஆனால் இதை நான் பெரியவரிடம் (காமராஜ்) பேச முடியாது.

உன் மீது பெரியவருக்கு அதிக அன்பு உள்ளது. நீ பொதுவான பத்திரிகைகாரன். இதை நீ சொன்னால் பெரியவர் யோசித்து முடிவு எடுப்பார்," என்று ராமசாமி உடையார் என்னிடம் சொன்னார். " ஐயா இது என்னால் முடியாது. இந்த மாதிரி முக்கியமான விஷயம் பற்றி பெரியவருக்கு ஆலோசனை கூறுகிற அளவுக்கு நான் பெரிய மனிதன் அல்ல. எல்லாம் அவருக்குத் தெரியும். பெரியவரை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பவன் நான். அவ்வளவு தான். என் வரம்பை நான் மீற மாட்டேன். தவிர ஒரு பத்திரிகையாளன் அரசியல் விஷயங்களில் தனிப்பட்ட அக்கறை காட்டக் கூடாது. மன்னியுங்கள்," என்று கூறினேன். கார் திரும்பவும் சேலம் திரும்பி என்னை இறக்கிவிட்டது.

1975 காமராஜ் மறைந்தார். அதற்கு முதல் நாள் அக்டோபர் 1-ந் தேதி சிவாஜி கணேசன் பிறந்தார். ஆண்டு தோறும் சிவாஜி கணேசன்பிறந்த நாளன்று காமராஜ் சிவாஜியின் வீட்டுக்குச் சென்று மாலை அணிவித்து நேரில் வாழ்த்துவது வழக்கம். ஆனால் 1975அக்டோபர் 1-ந் தேதி காமராஜ் சிவாஜி வீட்டுக்குச் செல்ல தயாராகவில்லை. பெரியவரை அழைத்துச் செல்ல குமரி அனந்தன் வந்து சேர்ந்தார். ஐயா, சிவாஜி வீட்டுக்கு புறப்பட வேண்டும் என்று குமரி அனந்தன் நினைவுபடுத்தினார்.



பார்க்கலாம், எனக்கு உடலும் மனசும் சரியில்லை என்றார் காமராஜ் பெரியவர் அப்படிச் சொல்ல பல காரணங்கள் இருந்தன. அந்தச் சமயத்தில் சிவாஜி கணேசனுக்கும், நெடுமாறனுக்கும் கோஷ்டி பூசல் இருந்தது. சிவாஜி ரசிகர்களும், நெடுமாறன் ஆதரவாளர்களும் மோதிக் கொண்டனர். காலையில் நெடுமாறனை வரச் சொல்லி செய்தி அனுப்பினார் காமராஜர். நெடுமாறன் வீட்டில் இல்லை என்று பதில் கிடைத்தது. திண்டிவனம் ராமமூர்த்தி ஆதரவாளர்களுக்கும், சிவாஜி ரசிகர்களுக்கும் அடிதடி என்று செய்தி.

இதனால் மனம் கசந்து போன காமராஜ் சிவாஜி கணேசன் வீட்டுக்கு செல்வதில் அக்கறை காட்டவில்லை. நீங்கள் சென்று வாழ்த்தவில்லை என்றால் சிவாஜி கணேசன் மனம் உடைந்து போவார் கட்சியில் மற்றவர்களும் குழப்பம் அடைவார்கள். இதுவே நாளை செய்தியாகிவிடும். கட்சிக்குத்தான் கெட்ட பெயர். அதனால் நீங்கள் சிவாஜி வீட்டுக்கு அவசியம் செல்ல வேண்டும்," என்று குமரி அனந்தன் பெரியவரிடம் கெஞ்சினார். அதன் பிறகே காமராஜ் சென்று சிவாஜி கணேசனை வாழ்த்தினார். இதெல்லாம் குமரி அனந்தனுக்கு மட்டுமே தெரியும். மறுநாள் தினத்தந்தியில் காமராஜ் சிவாஜியுடன் படம் வந்தது. காமராஜ் முகத்தில் புன்னகையில்லை!

அக்டோபர் 2ந் தேதி காந்திஜி பிறந்தநாளில் காமராஜ் மறைந்தார். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் திகில் ரகம். காமராஜர் உடலுக்கு எரியூட்டி அவரது அஸ்தி கலசத்தை சத்தியமூர்த்தி பவனில் வைத்துக் கொண்டே அரசியல் சதி, சதுரங்கம் நடைபெற்றது. காமராஜரின் ஸ்தாபன காங்கிரசை இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் இணைத்துவிட மூப்பனார், சிவாஜி கணேசன், ராமசாமி உடையார் என முக்கிய தலைவர்கள் ஆதரவு திரட்டினார்கள்.

ஆனால் குமரி அனந்தன், பா.ராமசந்திரன் இருவரும் ஸ்தாபன காங்கிரசைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என விரும்பினார். தனித்து நின்று கட்சியைநடத்த வேண்டும் என்பதே பெரும்பான்மையான தொண்டர்களின் விருப்பமாக இருந்தது. அடுத்த சில நாட்களில் தலைவர் பா.ராமச்சந்திரன் உடன் அழைத்துக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார் குமரி அனந்தன்.

இந்திரா காங்கிரசுடன் இணைக்க வேண்டாம். காமராஜ் வளர்த்த ஸ்தாபன காங்கிரசை தனித்து நின்று காக்க வேண்டும் என்று கட்சித் தொண்டர்கள் ஆவேசமாக முழங்கியதையும், கதறி அழுததையும் குமரி அனந்தன் தனது சுற்றுப் பயணத்தில் கண்டார். அந்த மாதிரி உணர்ச்சி மயமான ஒரு அரசியல் கட்சியை அதுவரை தமிழ்நாடு கண்டதில்லை. -


தொடரும்.....



**S.பால்பாண்டியன் ஹார்டுவேர்ஸ்**

**S.பால்பாண்டியன் டிப்போ**



**சிமெண்ட், செங்கல், ஜல்லி, கம்பி, பெயிண்ட் வகைகள், பி.வி.சி.பைப் வகைகள் கடப்பாக்கல், லிங்க் முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும், தரமாகவும் கிடைக்கும்.**



**உரிமையாளர்:** Lion S.**பால்பாண்டியன்**

20, புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78. போன்:24713885, 23716122.

# அருமை அண்ணாச்சி



## கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

ஒய்வில்லா உழைப்பு:

அன்புள்ள வசந்தனுக்கு:,

பல்வேறு சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து, பிரிந்திருந்த நாங்கள் சென்னையில் ஒன்று கூடியது பற்றி முந்திய கடிதத்தில் உங்களுக்கு எழுதியிருந்தேன். எங்கள் வாழ்வில் அது ஒரு திருப்புமுனை என்று தான் கூறவேண்டும். சொந்தக்கிராமத்தில் பல வருடங்களுக்கு முன்பு சேர்ந்திருந்த நாங்கள் துன்பப் புயலால் பாதிக்கப்பட்டு பலவாறு பிரிந்து வாழ வேண்டிய நிலைக்கு ஆளானோம். அந்த நிலை இப்போது தானே மாற்றியுள்ளது. சென்னையில் வாழ்ந்த அருமை அண்ணாச்சியுடனும், வெளிநாடு சென்றிருந்த அருமை அப்பாவுடனும் நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் இந்த அரிய வாய்ப்பு பல வருடங்களுக்குப் பிறகல்லவா கிடைத்துள்ளது.





சென்னையில் கால் வைத்த நான் பல ஆசைக் கனவுகளை மனதில் வளர்த்துக் கொண்டிருந்ததைப் பற்றியும் முந்திய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா அந்தக் கனவுகள் எல்லாம் நனவாகும் நாள் என்று...? இப்படித்தான் ஒவ்வொரு நாளும் என் மனதிற்குள்ளே பல வினாக்கள் எழுந்து விடை காண முடியாமலேயே மறைந்துவிடும். ஆனால் அந்த இலட்சியங்கள் மட்டும் மறையாமல் அடி மனதில் துடித்துக் கொண்டே இருந்தன,

நாங்கள் சென்னையில் சேர்ந்து வாழ முற்பட்ட அந்தச் சமயத்தில் அருமை அண்ணாச்சி அவர்கள் எல்டாம்ஸ் ரோட்டில் ஒரு தையற்கடை தொடங்க வேண்டும். என்று ஆசைப்பட்டார்கள். அருமை அண்ணாச்சிக்கு அப்போது இளம் வயது தானே? அதனால் எங்கள் சொந்தக்காரர் ஒருவரிடம் 300 ரூபாய் கொடுத்து ஒரு இடத்தை வாடகைக்கு அமர்த்தி, தையல் மிஷின் ஒன்றும் வாங்கித் தருமாறு அண்ணாச்சி கூறியபடியே தையல் மிஷினை வாங்கித் தையற்கடை நடத்துவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்.

பின்பு தான் தெரிந்தது, அந்தப் பெரிய மனிதர் தன் பெயரிலேயே தையற்கடையையும், மிஷினையும் வாங்கியிருக்கிறார் என்று உலகம் எப்படியிருக்கிறது பார்த்தாயா? நல்லவர், நம்பிக்கையானவர், அதனால் நமக்கு உதவி செய்வார் என்று அண்ணாச்சி எதிர்பார்த்த அந்த மனிதர் சுயநல நோக்குடன் துரோகம் செய்துவிட்டார் அண்ணாச்சிக்கு விபரம் தெரியாது என்ற நினைவில் தானே அவர் அப்படிச் செய்து விட்டார். ?



இனிய நண்பனே, அந்த மனிதரைப் போன்ற பலர் இன்னும் இங்கே இருக்கத்தான் செய்கிறார்கள். படிக்காத பாமர மக்களுக்கு உலகம் தெரியாது என்பதால் அவர்களை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் இன்னும் நம் நாட்டில் இருக்கத்தானே செய்கிறார்கள். ஒன்று மட்டும் உறுதி. பிறரை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் நிம்மதியாக வாழ்ந்தது கிடையாது. ஏமாற்றப்பட்டவர்கள் நிச்சயம் என்றேனும் வாழ்வில் உயர்ந்தே தீருவார்கள்.

அருமை அண்ணாச்சி அவர்கள் அன்று ஏமாற்றப்பட்டாலும் அதற்காக அவர்கள் மனம் சோர்ந்து விடவில்லை. துணிந்து மேலும் முயற்சி செய்து உழைத்தார்கள். பின்பு தனிப்பட்ட யாரையும் நம்பிப் பணம் தருவதற்கு அவர்கள் விரும்பவில்லை. அதனால் கஷ்டப்பட்டு சிறிது சிறிதாகச் சேர்க்க பணத்தை வங்கியில் போட்டு வந்தார்கள். அப்படிப் போடும் பணத்தில் வீட்டிற்குத் தேவையான பொருட்களையும் அவ்வப்போது வாங்கித் தருவார்கள்.

அன்பு வசந்தனே, இங்கு நான் ஒரு கசப்பான உண்மையையும் உனக்குக் கூறித்தான் ஆக வேண்டும். அருமை அண்ணாச்சி அன்று ஏமாற்றப்பட்ட போது தனக்கு நேர்ந்த துன்பமான அனுபவம் வேறு யாருக்கும் ஏற்படக் கூடாது என்று தான் நினைத்தாரே தவிர, அவரை ஏமாற்றியவரை பழிவாங்க வேண்டும் என்று சிறிது கூட நினைத்ததில்லை. அதற்கு மாறாக, எங்களை ஏமாற்றிய அந்த மனிதருக்கு பின்பு ஒரு சமயம் நாங்களே உதவி செய்தோம். அவர் மட்டும் தானா? இளமையில் துன்ப இருளில் நாங்கள் துடித்துக் கொண்டிருந்த போது எங்களை மேலும் சோதனைக்கு உள்ளாக்கியவர்கள் பலர் அவர்களில் பலர் பின்பு எங்களால் நன்மையடைந்தார்கள்.

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யுமாறு திருவள்ளுவர் கூறியதை எங்கள் வாழ்வில் பின்பற்றி விட்டோம் என்று நான் பெருமையுடன் கூறவில்லை அவர்களுக்கெல்லாம் உதவக்கூடிய நிலையை இறைவன் எங்களுக்குத் தந்தானே என்பதை நினைத்துப் பார்க்கிறோம்.

- தொடரும்.........

**2வருடங்களுக்கு பிறகு மீண்டும் புது பொலிவுடன் நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். தொடர்புக்கு: 9840948727.**

**அமிர்தகனி**

**திருமண தகவல் நிலையம்**

**நாடார் சமூகத்திற்கு மட்டும்**

**இந்து நாடார், சி.எஸ்.ஐ, ஆர்.சி, மறுமணம், மாற்றுத்திறனாளி, உடல் ஊனமுற்றோர் உட்பட அனைவருக்கும்**

**18,13வது குறுக்கு தெரு, முத்தமிழ் நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை-53.**

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133

## கல்வி

கல்லூரிக்குச் செல்லும் முன் பள்ளிப் பாடங்களை 4 பருவங்களாகப் படிக்க வைக்கிறார்கள்.

1.Pre-School and Kinder Garten, 2.Elementary School, 3.Middle School, 4.Senior High

விடுமுறை நாட்களில் பெற்றோர்களுக்கு மட்டும், தனி வகுப்புகள் நடத்துகிறார்கள். இதில் மாணவர்களின் பெற்றோர்கள் மட்டுமல்லாமல், மாணவர்களின் தாத்தா, சித்தப்பா, சித்தி, குடும்பத்திலுள்ள வயதான குடும்ப அங்கத்தினர்கள் யாராக இருந்தாலும், இலவசமாக கல்வி கற்கலாம்.

ஒவ்வொரு குழந்தைகளுடைய பெற்றோரும், ஓரிடத்தில் கூடி கருத்துக்களைப் பரிமாற, இதனை ஒரு வாய்ப்பாகக் கருதுகிறார்கள்.

"குழந்தைகளைப் படிக்க வைக்கும் முறை", "கண்காணிக்கும் முறை", "தங்கள் குழந்தைகளுடன் படிக்கும் சக மாணவர்கள் கொடுக்கும் கஷ்டத்திலிருந்து மீண்டு வர குழந்தைகளுக்கு உதவி செய்தல்", "சிறு குழந்தைகளிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் திறமையாகக் கையாண்டு, தீர்த்து வைத்தல்" போன்ற பாடங்களைப் பெற்றோருக்குச் சொல்லித் தருகிறார்கள்.

சிறப்பாக, சக குழந்தைகளின் பிரச்சனைகளை, நடுநிலைமையோடு அணுகி தீர்த்து வைக்கும் முறை.

அப்பா-குழந்தை இவர்களிடையேயுள்ள உறவை வலுப்படுத்துதல்.

போன்ற பாடங்களைச் சொல்லி தருகின்றனர். சிறப்பு கல்வி பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும், பெற்றோருக்குச் சொல்லி கொடுக்கப்படுகிறது.

"மாணவர்களுக்கு நற்பண்புகளை வளர்த்து அதன் மூலமாக கல்வியைப் புகட்டி வெற்றியடையச் செய்தல்" சம்பந்தமாக பாடங்களையும், பெற்றோருக்குச் சொல்லித் தருகின்றனர்.

"குழந்தைகளைத் தேர்வுக்குத் தயார் செய்யும் முறையைச்" சொல்லித் தருகின்றனர். பெற்றோர்கள், குழந்தைகளுடன் வந்தால், அந்தக் குழந்தைகளைக் கவனித்து, உணவும் கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

இந்த இலவச வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பெற்றோர்களுக்கு அறிவுரை கூறுகின்றனர்.

இந்திய கல்வி உரிமைச் சட்டம் 2009ல் குறிப்பிட்டுள்ளது போன்று, டெக்சாஸில் வாழும் எல்லாக் குழந்தைகளையும் கண்டிப்பாகப் பள்ளியில் சேர்க்க வற்புறுத்துகிறார்கள். இதற்கு சட்டம் இயற்றியுள்ளனர்.

"அட்மிஷன் விஷயத்தில் தாராளமாக நடந்து கொள்கின்றனர். சொந்த வீட்டில் வசிக்காமல், ஏதாவது ஒன்றில் தங்குபவராக இருந்தாலும் சரி, அவர்கள் புகலிடத்தில் தங்கினாலும் சரி, இளைஞர்கள் புகலிடம் அல்லது மாற்று இடத்தில் வாழும் திட்டத்தின் கீழ் வாழ்ந்தாலும் சரி, ஓட்டல், வார வாடகை கொடுத்து வீட்டிலோ அல்லது அடுக்குமாடி வீட்டிலோ வாழ்ந்தாலும் அல்லது ஒரு அடுக்குமாடி வீட்டில் பொருளாதார சிக்கலில் அல்லது இழப்பு காரணமாக ஒரு வீட்டில் பல குடும்பம் வாழ்ந்தாலும், கைவிடப்பட்ட கட்டிடங்களிலோ அல்லது காரிலோ, காம்பவுண்டுக்கு உள்ளேயோ அல்லது தெருவில் வாழ்ந்தாலும் சரி, தற்காலிகப் பாதுகாப்பிடத்தில் வாழ்ந்தாலும் சரி, அது தன்னுடைய பெற்றோரோடு வசிக்கலாம் அல்லது சட்டப்படி கார்டியனாக இருந்து, அவரோடும் வசிக்கலாம்". இவர்களுக்கெல்லாம் இங்கு பள்ளியில் படிக்க அட்மிஷன் கொடுக்கின்றனர்.

கரண்ட் இல்லாத, தண்ணீரில்லாத, வசதி குறைவான வீடாக இருந்தாலும் சரி அல்லது நண்பர்களோடு தங்கினாலும் அல்லது நிலையில்லாத குடும்பமாக இருந்தாலோ அல்லது தன்னுடன் இளைஞர்கள் இல்லாமல், தான் மட்டும் இருந்தாலும் பள்ளியில் சேர்ந்து படிக்கலாம். இவர்களுக்கு அட்மிஷன் மறுக்கப்படமாட்டாது. "அட்மிஷனுக்கு வரும்போது, கீழ்க் குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களைக் கொடுக்க வேண்டிய தேவையில்லை" என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

தங்குமிடம் பற்றிய சான்றிதழ், T.B. நோய் மற்றும் தடுப்பு ஊசி போட்டது சம்பந்தமாக, பிறப்பு சான்றிதழ், பள்ளி ரெக்கார்டு, கார்டியன் சம்பந்தமான சட்ட பத்திரிகைகள், இதற்கு முன்னால் படித்த பள்ளி சான்றிதழ்கள்.



இந்திய கல்வி உரிமைச் சட்டத்தில், "பிறந்தநாள் சான்றிதழ் இல்லை என்பதற்காக அட்மிஷன் மறுக்கக்கூடாது. தாய், தந்தை உறுதிமொழி கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறுகிறது.

இங்கு ஏதாவது சூழ்நிலையில் தொடர்ந்து படிக்க முடியாமல், கல்வியாண்டு இடையில் படிக்க விரும்பினால், அவன் படித்த பள்ளியில் தொடர்ந்து படிக்கலாம். வேறிடத்திற்குப் போனாலும் சரி அல்லது வேறு மாவட்டத்திற்குச் சென்றாலும் சரி, படித்து பாதியில் விட்ட அதே வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். இடையில் நின்று, பிறகு, திரும்ப அந்தப் பள்ளியில் சேர்ந்து படித்தால், குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம். அல்லது குறைந்த விலை சாப்பாட்டுத் திட்டத்தில் உணவருந்தினால், தொடர்ந்து உணவருந்தலாம். இதுமட்டுமின்றி, வேறு உணவுத் திட்டத்திற்கு தகுதியுடையவராயிருந்தால், அதிலும் தொடர்ந்து உணவருந்தலாம்.

பள்ளிகளில் நடக்கும் எல்லாப் பள்ளி நிகழ்ச்சிகளிலும், தகுதியின் அடிப்படையில், இந்த மாணவர்கள் தொடர்ந்து கலந்து கொள்ளலாம். இது சம்பந்தமாக ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால், அதனைத் தீர்த்து வைக்க 'லைசன்' அலுவலரை பள்ளி அட்மிஷன் நேரத்தில் அணுகலாம்.

Texas Homeless Education Officer University of Texas, Austin 800-446-314

பெற்றோர்களுடன், குழந்தைகளுக்கு கல்வி கற்பதில் ஏற்படும் பிரச்சனைகளை கலந்தாய்வு மூலம் தீர்வு காண்கிறார்கள். இதனை டெக்சாஸ் பல்கலைக்கழகத்திலுள்ள வழிகாட்டுதல் மற்றும் கலந்தாய்வு துறையும் Guidance and Counselling Department மற்றும் சான் அன்டோனியோவின் வடக்குப் பக்க பள்ளி மாவட்டமும் இணைந்து இதனை நடத்துகிறார்கள்.

இவர்கள் பெற்றோர்களிடம் கேட்கும் கேள்விகள் இங்கே சொல்லப்படுகிறது.

"சின்ன பிரச்சனைகளில் குழந்தைகளோடு இணைந்து செயல்படுகிறீர்களா? இதுதான் பள்ளி வெற்றிப் பாதையாக அமைய உதவுகிறது. உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனையைத் தீர்க்க நீங்கள் மாலை வகுப்புகளுக்கு வந்தால் போதும். அதற்குச் சம்மதமா?"

குழந்தைகள் படிக்க, குழந்தைகளின் குறிக்கோளை வகுக்க, குழந்தைகள் முன்னேற, செயல் திட்டம் வகுக்க, ஒவ்வொரு ஆண்டும், 'தேசிய கவுன்சலிங் வாரத்தைக்' கொண்டாடுவார்கள்.

**மாணாக்கர்களின் அறிவையும் திறமையையும் கணக்கிடுதல் (TAKS)**

டெக்சாஸ் மாநிலம் முழுவதும் ஆண்டுக்கு ஒருமுறை மார்ச் மாதத்தில் தேர்வு நடத்தி வகுப்பு வாரியாக மாணாக்கர்களின் அறிவையும், திறமையையும் கணக்கிடுகிறார்கள். இது 3-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களின் திறமையை மதிப்பெண்களின் அடிப்படையில் கணக்கிடுகிறார்கள்.

வகுப்பு மற்றும் பாடம் வாரியாக, மாணவர்களின் திறமையைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடுகின்றனர். இதற்கு வாய்ப்பு வகுப்பு என்று பெயர்.

| பாடம் | வகுப்பு |
|---|---|
| படித்தல் | 3,9 |
| எழுத்து | 4,7 |
| ஆங்கில மொழி (கலை) | 10, 11 |
| கணக்கு | 3, 11 |
| அறிவியல் | 5,8,10 மற்றும் 11 |
| சமூக அறிவு | 8,10,11 |

மாணவர்களின் "திறமையையும், அறிவையும்" கணக்கிட பாடத் திட்டம் அமைத்து பாட வகுப்புகளில் பாடங்கள் சொல்லித் தரப்படுகிறது. இரண்டு செமஸ்டராகப் பாடம் நடத்தி தேர்வு நடத்துகிறார்கள். (தொடரும்)

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



**நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.**



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ஹராக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182),
**திருவொற்றியூர், சென்னை-19.**

**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்- 9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**


## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:M-193-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு குரு |
| சனி ராகு | | | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந் சுக் | | குரு செவ் |
| | அம்சம் | | |
| சூரி | | | |
| சனி புத | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:-வாத்தியார்குடியிருப்பு, உடன்குடி அருகில், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-27.8.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-அவிட்டம், படிப்பு-B.E., Software Engineer., Chennai., மாதவருமானம்-48,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9790819077, 9444440412. File No:M-55-G.

| | | | |
|---|---|---|---|
| லக்கே சனி | | | சுக் |
| | இராசி | | செவ் |
| சந் | | | சூரி புத |
| வியா | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | சுக் ராகு | |
| | அம்சம் | | சூசனி செ |
| | | | சந் வியா |
| | கேது | புத | லக் |




# ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**

**செல்9445171819, 044-22253484.**

2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.







# நாடார் நவீன சுயம் வரம்

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பா.ரேவதி, சொந்தஊர்-விளாத்திக்குளம் வட்டம், ஜமீன் கரிசல்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-நெமிலிவட்டம், பனப்பாக்கம் இராணிப்பேட்டை மாவட்டம்-631052, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-20.5.1997, உயரம்-5.5, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-M.Sc., Bio Tech., Diploma in Montessori., இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையில உள்ள மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | புத | சூரி சுக் | |
| | இராசி | | |
| குரு | | | செவ் மாந் |
| | | லக் சந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சூரி | அம்சம் | | மாந்தி கேது |
| சந்தி ராகு | | | புத |
| | சனி செவ் | லக் | குரு |

தொடர்புக்கு:9943027898, 9787004133File No:M-293-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9445307067, 9445426581.File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்: சுவாதி(எ) ரோகிணி, சொந்தஊர்-ராஜாங்காபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-4.12.1999, உயரம்- 5.1, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-B.Com., MBA., இந்த மணமகளுக்கு, படித்து வேலை அல்லது வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு: 9841551529, 7358464609, File No: M-19-G

| | | | |
|---|---|---|---|
| | குரு சனி | லக் | |
| | இராசி | | ராகு |
| கேது செவ் | | | |
| | சூரி மா | சுக்சந் புத | |

| | | | |
|---|---|---|---|
| | குரு கே | லக் செவ் | புத |
| | அம்சம் | | சனி |
| | | | |
| சூசந் மாந் | சுக் | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:வே.மல்லிகா, சொந்தஊர்-தெற்கு தீத்தாம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-14.11.1997, உயரம்-5.5, ராசி-கும்பம், நட்சத்திரம்-பூரட்டாதி 2ம் பாதம், படிப்பு-M.Sc., CS., Software Engineer., மாதவருமானம்-80,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள (அல்லது) தொழில் செய்யும் மணமகன் தேவை. 9789877548, 9884248165, File No: M-285-G

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| சந் கேது | இராசி | | லக் |
| குரு | | | ராகு |
| | சுக் செவ் | | சூரி புத |

| | | | |
|---|---|---|---|
| | | சந் கேது | குரு |
| | அம்சம் | | |
| சனி லக் | | | |
| செவ் | ராகு | சுக் | சூரி புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:திவ்யதர்ஷினி, சொந்தஊர்-தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-12.10.1998, நேரம்:காலை:11.2, உயரம்-5.5, நிறம்-சிவப்பு, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை 4ம் பாதம், லக்கினம்:மிதுனம், படிப்பு-M.Sc., (Physics)., B.Ed., Private School Teacher, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9245486806, 9789782738. M-235-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சந் |
| குரு கே | இராசி | | |
| மாந் | | | செவ் ராகு |
| லக் | | புத | சூரி சுக் |

| | | | |
|---|---|---|---|
| சந் சனி | | லக்குரு ராகு | செவ் சுக் |
| | அம்சம் | | |
| புத | | | சூரி |
| | கேது | | மாந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:வெ.சந்தியா, சொந்தஊர்-அகப்பைக்குளம்-நாசரேத் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-தெற்கு ஆத்தூர், தூத்துக்கடி மாவட்டம், நிறம்-சிகப்பு, பிறந்ததேதி-16.1.1994, உயரம்-5.2, ராசி-கும்பம், நட்சத்திரம்-சதயம், படிப்பு-CA., Auditor., மாதவருமானம்-1,25,000 பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல உத்தியோகத்தில் உள்ள உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரன் தேவை. 04639-238217, 9442885836, 9382288999, 9865614783. File No:M-262-G. அப்பா.வெள்ளையா.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| சந் | இராசி | | |
| சூபுத சனிசு | | | |
| செவ் | லக் ராகு | வியா | |

| | | | |
|---|---|---|---|
| லக்வி சந் | | | புத |
| கேது | அம்சம் | | |
| சூரி | | | ராகு |
| செவ் சுக் | | | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:மூ.பிரியங்கா, சொந்தஊர்-நெல்லை மாவட்டம், காளத்திமடம், இருப்பிடம்-சென்னை, நிறம்-மாநிறம், பிறந்ததேதி-3.6.1996, உயரம்-5.5, ராசி-தனுசு, நட்சத்திரம்-மூலம், படிப்பு-B.Sc., B.Ed., கவிபாரதி வித்தியாலயா CBSC., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9940571865, 9940571842, File No: M-289-G

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | புத | சூரி செவ் | சுக் |
| | இராசி | | |
| | | | லக் |
| குரு சந் | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | சூரி ராகு |
| | அம்சம் | | சனி |
| செவ் சுக் | | | |
| லபுத கேது | | குரு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ரா.சுகன்யா, சொந்தஊர்:உடன்குடி, இருப்பிடம்-சென்னை, குன்றத்தூர், நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-மீனம், நட்சத்திரம்-உத்திரட்டாதி, பிறந்ததேதி-21.12.1993, படிப்பு-B.Sc.,M.Sc., மளிகை கடை ஆவின் டீலர், இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள எந்தவித கெட்ட பழக்கவழக்கம் இல்லாத நல்ல மணமகன் தேவை. தொடர்புக்கு:9884886112, 7358596629. File No: M-282-G..

| | | | |
|---|---|---|---|
| சந் | | கேது | |
| | இராசி | | |
| சனி | | | |
| லக்சு புசெவ் | சுக் ராகு | குரு | |

| | | | |
|---|---|---|---|
| சுக் கேது | | சூரி புத | செவ் |
| குரு | அம்சம் | | |
| | | | சந் சனி |
| | லக் | | ராகு |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.ராதா, சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-திருநெல்வேலி, நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-தனுசு, நட்சத்திரம்-உத்ராடம், பிறந்ததேதி-27.1.1998, படிப்பு-B.E.,(ECE)., Infosis, monthly Income:40,000 பெறும் இந்த மணமகளுக்கு, Software Engineering படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9943870050, 9443487475, File No: M-291-G..

| | | | |
|---|---|---|---|
| லக் சனி | | | |
| செகு கே | இராசி | | |
| சூரி | | | ராகு |
| புசுக் சந் | | | |

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரி | | |
| | அம்சம் | | |
| லக் சனி | | | ராகு |
| செவ் சந் | புதசு குரு | | |

## R.C. கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:VinithaMary , சொந்தஊர்:காவல்கிணறு, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-16.07.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, படிப்பு-Post Graduate., Private Sector., வருடம் வருமானம்-12-14லட்சம் பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலை அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. 9962117571, 9861658486. File No: RC-364-G.

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேனி | 26 | B.E | படித்துவேலைகுணமுள்ள | 150 | 7845722718 | கன்னி-உத்திரம்2 | M4 | 50-60 |
| 2. | சாத்தான்குளம் | 28 | B.E | சென்னையில்வேலை | 5.5 | 9444497083 | கும்பம்-அவிட்டம் | M5 | நேரில் |
| 3. | வத்திராயிருப்பு | 31 | MBBS | டாக்டர் படித்த | 5.6 | 9566242975 | கும்பம்-சதயம் | M6 | நேரில் |
| 4 | விருதுநகர் | 24 | B.Tech | 26-30 வயதுக்குள் | 5 | 9619717043 | விருச்சிகம்-கேட்டை | M7 | நேரில் |
| 5 | தூத்துக்குடி | 21 | BBA | படித்துவேலை | 5.2 | 9940493058 | ரேவதி-மீனம் | M8 | 10பவுன் |
| 6 | திருநெல்வேலி | 25 | B.E | படித்துவேலை | 5.3 | 9443808324 | விருச்சிகம்-கேட்டை | M9 | நேரில் |
| 7 | சுரண்டை | 32 | B.Sc | படித்துவேலை/தொழில் | 5.3 | 9361480862 | கடகம்-பூசம் | M10 | நேரில் |
| 8 | தூத்துக்குடி | 24 | MBBS | டாக்டர் படித்த | 5.2 | 9444759246 | மீனம்-உத்திரட்டாதி | M11 | நேரில் |
| 9 | சாத்தூர்ராஜாப்பட்டி | 24 | B.Sc | படித்துநல்லவேலை | 5.4 | 9444638351 | கும்பம்-சதயம்2 | M12 | 50பவுன் |
| 10 | தூத்துக்குடி | 29 | B.Com,MBA | படித்த | 5.2 | 8248793734 | கன்னி-சித்திரை | M13 | 20பவுன் |
| 11 | திருச்சி | 33 | B.E,M.E | நல்லகுடும்பம்-மறுமணம் | 5.4 | 9842430155 | கும்பம்-புரட்டாதி | M14 | மறுமணம் |
| 12 | நெல்லை | 26 | Bio-Tech | படித்துவேலை/தொழில் | 165 | 9710191887 | விருச்சிகம்-கேட்டை | M15 | நேரில் |
| 13 | அப்புவிளை | 27 | MCA | சாப்ட்வேர்என்ஜினியர் | 5.7 | 9025206396 | மிதுனம்-திருவாதிரை | M17 | 50பவுன் |
| 14 | வீரமாணிக்கம் | 23 | B.Com,MBA | படித்துவேலை | 5.7 | 9952065305 | அவிட்டம்-கும்பம் | M18 | நேரில் |
| 15 | தூத்துக்குடி | 24 | B.Com,MBA | படித்துவேலை/தொழில் | 5.1 | 9841551529 | துலாம்-சுவாதி | M19 | 150பவுன் |
| 16 | நாலுமாவடி | 39 | B.Sc,A.C.A | படித்துவேலை | 5.4 | 7397359372 | சிம்மம்-மகம் | M20 | நேரில் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 24 | B.Sc,B.Ed | டிகிரிபடித்த | 5 | சென்னை | 9551391315 | 456G | 30பவுன் |
| 2 | கன்னியாகுமரி | 36 | Ph.D | Ph.D படித்த | 5.3 | சென்னை | 9841455145 | 457G | நேரில் |
| 3 | அருப்புக்கோட்டை | 31 | M.A,B.Ed | படித்துவேலை | 5.4 | சென்னை | 9444085373 | 458G | 20பவுன் |
| 4 | தண்டுபத்து | 31 | B.Com | படித்துவேலை/தொழில் | 5.1 | சென்னை | 9941077789 | 459G | நேரில் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திசையன்விளை | 22 | B.Com,M.Com | படித்தகடவுள்பக்தியுள்ள | 165 | சென்னை | 9841077937 | 358G | நேரில் |
| 2 | ஹைதராபாத் | 26 | Pharm D | படித்துவேலை | 4.9 | சென்னை | 9652661756 | 359G | நேரில் |
| 3 | நாகர்கோவில் | 26 | B.Com,MBA | படித்துவேலை | 4.5 | சென்னை | 9841465159 | 360G | 25-30 |
| 4 | திருநெல்வேலி | 27 | B.Com | சொந்தவீடுநல்லவேலை | 5.5 | சென்னை | 8148585215 | 361G | நேரில் |

நாடார் வரன்களுக்கான நம்பிக்கையான இடம்
இம்பம்
திருமண தகவல் மையம்
என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....
இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள் வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.

மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்
எண்.1. ஸ்டேசன்ரோடு. சானடோரியம். சென்னை - 600 047.
தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ஜே.இந்துஜா (எ) சிவசூர்யா, சொந்தஊர்-குலையன்கரிசல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-18.5.1997, நிறம்-மாநிறம், உயரம்-5.1, ராசி-கன்னி, நட்சத்திரம்-ஹஸ்தம், படிப்பு-B.E., M.Tech., வேலை-Accenture., (I.T), மாதவருமானம்-60,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் அல்லது பெங்களூரில் 80,000க்கு மேல் வருமானம் பெறும் ஐ.டி.கம்பெனியில் உள்ள மணமகன் தேவை., 8056159691, 9952091341, File No: M-233-G..

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | புத | சூரி செவ் | |
| | இராசி | | |
| வியா | | | செவ் |
| | | லக் | ராகு சந் |

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | லக்சந் புத |
| சூரி | அம்சம் | | கேது |
| ராகு சனி | | | |
| | செவ் | | வியா |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிவஞானபுரம், சேர்வைகாரன்மடம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., MBA., வேலை-பிரான்சு நாட்டு வங்கி, வருடம்:8,50,000வருமானம் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| கே மாந் | | | சந் லக் |
| சுக் சனி | இராசி | | |
| சூரி செவ் | | | |
| புத குரு | | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | சனி | சுக் | சூரி |
| கே மாந் | அம்சம் | | குரு |
| சந் | | | செவ் ராகு |
| | | புத லக் | |

தொடர்புக்கு:9381333339, 9444844884. File No:P-792-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அ.ஷன்மதி, சொந்தஊர்-மாவடிப்பண்ணை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பெரம்பூர்-11, பிறந்ததேதி-5.10.1994, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-கன்னி, நட்சத்திரம்-ஹஸ்தம், படிப்பு-MBBS, Doctor, நல்ல வசதியான குடும்பத்தை சேர்ந்த இந்த மணமகளுக்கு, டாக்டர் , ஐ.டி.கம்பெனியில் பணிபுரியும் நல்ல வசதியான குடும்பத்தை சேர்ந்த மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சனி லக் | இராசி | | செவ் |
| | | | |
| மாந் | | குருபுத ராகு | சூரிசந் புத |

| | | | |
|---|---|---|---|
| | ரா | குரு | சூரிசு லக் |
| | அம்சம் | | சந் |
| | | | புத செவ் |
| | சனி | கேது | |

தொடர்புக்கு: 9884168816, 9840443868. 9840798484, File No: M-300-G.


ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை

செல்:94980 75679, 9445227158, 9677060358.

தூத்துக்குடி மாவட்டம், செட்டியார்பத்து
வாக்கியம் பஞ்சாங்க கணிதர் ஜோதிடர்
K.M.துரைசாமி நாடார் மகன் ஜோதிடர்
C.T.சிவக்கொழுந்து வேல் மகள்

**ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்**

திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில்
ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:9498075679.

**முன் அட்டைபட செய்தி............**



இடையன்விளை பி.சுப்புநாடார், எஸ்.சுசீலா அவர்களுடன் மணமக்கள்

தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அவர்கள் அனைத்துலக எம்ஜிஆர் மன்றம் ஆரம்பித்த நாள் முதல் அவருடன் நேரடி கடிதத் தொடர்பிலிருந்த தூத்துக்குடி மாவட்டம், சிவஞானபுரத்தில் செயலாளர் என்று செல்லமாக அனைவராலும் அழைக்கப்பட்டவரும் சிவஞானபுரம் எம்ஜிஆர் மன்ற நிரந்தர செயலாளராக பணியாற்றிய வரும், அதிமுக பிரமுகருமான நிலக்கிழார் தெய்வத்திரு.பி.வேல்சாமி நாடார், வி.மங்களம் அவர்களின் மகன்வழி பேரனும், வி.பாலசேகர் பி.செல்வமலர் அவர்களின் மகனும், தூத்துக்குடி மாவட்டம் இடையன்விளை பி.சுப்புநாடார், எஸ்.சுசீலா அவர்களின் மகள் வழிப் பேரனுமாகிய-மணமகன்:பா.நிஷாந்துக்கும்

தூத்துக்குடி மாவட்டம், திருப்பணிசெட்டிகுளம் தெய்வத்திருவாளர்கள்:டி.பக்கிள் நாடார், பி.பொன்னுத்தாய் அவர்களின் மகள் வழிப் பேத்தியுமான, எஸ்.சதாசிவன்-எஸ்.பாமா அவர்களின் மகள், மணமகள் எஸ்.பபிதாவுக்கும் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு 27.10.2023 அன்று தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் எல்லாம் வல்ல முருகப் பெருமான் அருளால் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. அன்று மாலை 7மணிக்கு சிவஞானபுரத்தில் அமைந்துள்ள யூனிக்கா மஹாலில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. கடந்த 1.11.2023 அன்று மாலை 7மணியளவில் சென்னை அரும்பாக்கத்தில் அமைந்துள்ள சௌபாக்யா மஹாலில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மூன்று நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய தமிழ்நாடு வணிகர்சங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா நாடார், மாநில துணைத் தலைவர் எஸ்.மகேஸ்வரன் நாடார், சென்னை சைதாப்பேட்டை முன்னாள் கவுன்சிலரும், அதிமுக பிரமுகருமான சைதை சொ.கடும்பாடி அவர்கள், சைதை நாடார் சங்கத் தலைவர் வி.பி.ஆர்.பாஸ்கரன் நாடார், அந்தமான் தொழிலதிபர் டி.ஜெயக்கொடி நாடார், மும்பை தொழிலதிபரும் தங்கம் எலக்டிரிக்கல்ஸ் பங்குதாரருமான பி.கூத்தரசன் நாடார், திருப்பூர் வாழ் நெல்லை தூத்துக்குடி மாவட்ட நாடார்கள் ஐக்கிய சங்கத்தின் பொதுச்செயலாளரும், அனைத்து வியாபாரிகள் நலச்சங்கம் திருப்பூர் மாவட்டத் தலைவருமான மூலக்கரை ஆர்.சுரேஷ் நாடார், சென்னை பல்லாவரம் தொழிலதிபர் டி.மகேஷ்பாபு நாடார் கோவை தொழிலதிபர் டி.ரமேஷ் நாடார், சென்னை மேடவாக்கம் தொழிலதிபர் ஜி.இளங்கோ நாடார், சைதாப்பேட்டை தொழிலதிபர் டி.சுந்தரபாண்டி நாடார், சைதாப்பேட்டை தொழிலதிபர் எஸ்.பாலமுருகன் நாடார், சைதாப்பேட்டை, தொழிலதிபர் எஸ்.சுந்தர் கணேஷ் நாடார் அவர்களுக்கும் மற்றும் திருமண நிகழ்ச்சியிலும் இரு திருமணவரவேற்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வி.பாலசேகர், பி.செல்வமலர்-சைதாப்பேட்டை. 9384888889.

## நாடார் முரசு பிறந்த கதை

இந்த நாடார் முரசு பிறந்த கதை ஒரு பெரிய சரித்திரம் அந்த சரித்திரத்திலே நான் ஒரு சிறிய நடிகன் தான் ஆனால் இந்த சிறியவனுக்கு பல வித இன்னல்களும், சோதனைகளும் போராட்டங்களும் உள்ளன. இத்தனைக்கும் எனது குடும்பம் ஒரு கோடீஸ்வர பணக்கார குடும்பம் தான். அங்கேயும் சிறு வயதில் நான் அனுபவித்த வறுமைகள் ஏராளம். ஆனால் இப்போது நினைத்து பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. எனது சரித்திரம் 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆரம்பமாகிறது. அப்போதைய வாழ்க்கை நிலைக்கும், இப்போதைய நிலைமையும் பார்க்கும் போது எல்லாமே தலை கீழாக தெரிகிறது.

அப்போதெல்லாம் எல்லா குடும்பத்திலும் குறைந்தது ஒரு சில குடும்பத்தில் 5 அல்லது 6 பேர் இருந்தார்கள். ஒத்தைக்கு ஒரு பிள்ளை இருக்கும் வீடு ஒன்று இரண்டு தான். ஒவ்வொரு குடும்பத்திலும் சொந்த பந்தங்கள் நிறைந்திருக்கும் என் தந்தை கிராம முன்சீப் வேலை பார்த்தார்கள். எங்களுக்கு அது வாரிசு பணியாகும் என் மூதாதையர்கள் காலத்தில் என் தந்தை சிலோனில் அச்சு தொழில் செய்து நிறைய சம்பாதித்து எங்களது ஊரிலேயே சொத்து சுகங்கள் வாங்கி செல்வாக்கோடு இருந்தார்கள். தனது பூர்வீக வாரிசு வேலையும் விடக்கூடாது என்ற நோக்கத்தில் இருந்தவர் வந்து முன்சீப் பணியை பெற்று பணியை பெற்று வேலை செய்து வந்தார்கள். என் தந்தையை கிராமணியார் என்று அழைப்பார்கள் பிரிட்டிஷ்காரர்களால் எங்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட பெயர் அது. ஒரு கிராமத்திற்கு வாரிசு அதிகாரியாக இருந்ததால் கிராமணியார் என்று பட்டம் எங்கள் குடும்பத்திற்கு உண்டு அந்த காலத்திலேயே எங்கள் சுற்று வட்டார கிராமங்களிலும் சேர்ந்து பல ஏக்கர் நிலபுலங்கள் இருந்தது. அது பிரிட்டிசார் ஆட்சிபுரிந்த காலம் அப்போது கிராம அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்கள் இருந்தது. எங்களை சுற்றி ஜாதி ஜனங்கள் சொந்தபந்தங்கள் நிறையவே இருந்தார்கள். ஆடு, மாடு, கோழி, வாத்து, எருமை போன்ற அத்தனையும் எங்களிடம் இருந்தது. என் தந்தை சிலோனில் பணியாற்றியதால் என் குடும்பம் அந்த நாகரீகத்திலேயே நாங்கள் வாழ்ந்தோம். எங்கள் பெற்றோர்களுக்கு நாங்கள் மொத்தம் ஒன்பது பிள்ளைகள் ஒன்பது பேரும் சிறு பிள்ளைகளாக விளையாடி படித்து மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தோம். என் தந்தை மிகவும் கண்டிப்பானவர் வீட்டு சத்தம் வெளியில் கேட்கக்கூடாது என்று கண்டிப்பாக வளர்த்தார்கள். என் தந்தை வீட்டில் இருந்தால் நாங்கள் எங்கு இருக்கிறோம் என்றே தெரியாது. எல்லோரும் கப்சிப்பாக நல்ல பிள்ளைகளாக ஆங்காங்கு போய் புத்தகத்தை எடுத்து அமர்ந்துவிடுவோம் என் தாய் எங்களை எல்லாம் மிகவும் அரவணைப்போடு வளர்த்தார்கள். நிறைந்த சொத்த சுகங்களோடு ஒரு ஜமீன்தார் ராணி போல் வாழ்ந்தாலும் என் தந்தைக்கு மிகவும் அடங்கியே வாழ்ந்தார்கள். ஏனெனில் என் தந்தை மிகவும் கண்டிப்பானவர்கள். கடுமையானவர்கள் சிறிய தவறுக்கும் பெரிய தண்டனை தருவார்கள். என் தந்தையின் கண்டிப்பை நினைக்கும் போது இப்போதும் எனக்கு கை கால்கள் நடுங்கும் அதனாலேயே எனது ராணுவ பணியின் போது கூட நான் எப்படி பணியில் சேரும் போது இருந்தேனோ அதே போல் பணி நிறைவிலும் வந்தேன்.

## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!!

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

**பெண்கள் முன்னேற்றத்திற்காக உருவான புதிய தொழில் சிந்தனை!**

இத்தனைக்கும் மத்தியில் நமது பெண்கள் சமையலுக்கு தேவையான பொருட்களை பார்த்து பார்த்து வாங்கும் வேலை இருக்கிறதே, அது மிகப்பெரிய வேலை. அதுதான் என்னை ரொம்பவும் யோசிக்க வைத்தது. எனது 25-வது வயதில் இருந்து, நான் ஒவ்வொரு கடையாக சென்று 'ஆர்டர்' எடுத்தவன். அப்போதெல்லாம் ஒவ்வொரு குடும்பத்தலைவியும் சமையலுக்கான உணவுப்பொருட்கள் வாங்குவதை நான் கூர்ந்து கவனிப்பேன்.

அவர்கள், மாதந்தோறும் சமையலுக்கு தேவைப்படும் பொருட்களை பட்டியல்போடுகிறார்கள். அதற்குரிய பணத்தை சேகரிக்கிறார்கள். பல கடைகள் ஏறி இறங்கி பார்த்து, கவனித்து உணவுப்பொருட்களை வாங்குகிறார்கள். உதாரணமாக காய்ந்த மிளகாயை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் எதை தரமானது என்று நினைக்கிறார்களோ அதை வாங்குகிறார்கள். (அது தரமானதுதானா என்பது வேறு விஷயம்). பின்பு அதனை உலர வைக்கிறார்கள். பாதுகாக்கிறார்கள். அதை தூளாக்க அரவை நிலையத்தை தேடிப்போகிறார்கள்.



தூளாக்கி கொண்டுவந்து சூடு ஆறவைத்து ஒரு டின்னில் அடைக்கிறார்கள். அதில் பூச்சி, வண்டு விழுந்து விடாமல் பாதுகாக்கிறார்கள்.

ஓடி ஓடி அவர்கள் இத்தனையையும் செய்தால்தான் அவர்களது சமையல் அறைக்குள் மிளகாய்த்தூள் என்ற ஒரு சமையல் பொருள் வந்து சேரும். இப்படி மஞ்சள்தூள், மல்லித்தூள், வெந்தயத்தூள்... போன்று ஒவ்வொன்றுக்கும் அவர்கள் மெனக்கெட வேண்டியதிருக்கிறது.

மாவுகளுக்காக அவர்கள் அரிசி, உளுந்து, கோதுமை, கடலை, கேழ்வரகு... போன்று ஒவ்வொன்றை வாங்கவும், உலர்த்தவும், அரைக்கவும் நடையாய் நடக்கவேண்டியதிருக்கிறது.



ஒரு மசாலா பொருளோ, ஒரு மாவுப்பொருளோ ஒரு வீட்டின் சமையல் அறைக்குள் வருவதற்கு ஒரு பெண் எவ்வளவு நேரத்தை - எவ்வளவு உழைப்பை - எவ்வளவு பணத்தை - எவ்வளவு அலைச்சலை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை கணக்கிட்டு பார்த்தபோது நான் ரொம்பவே அதிர்ந்துபோனேன்.

'உணவுப்பொருட்கள் மிக அத்தியாவசியமானவைதான். ஆனால் அதற்காக ஒவ்வொரு பெண்ணும் இவ்வளவு நேரத்தை, பணத்தை, உழைப்பை இழந்து கஷ்டப்பட்டுதான் ஆகவேண்டுமா?' என்ற கேள்வி எனக்குள்ளே எழுந்தது.

இதில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் கவனித்தேன். அரைப்பதற்காக மிளகாயோ, மல்லியோ வாங்கும் தாய்மார்களுக்கு தான் வாங்குவது தரமானதுதான் என்று எப்படி தெரியும்! அவர்கள் தரமானதைதான் வாங்குகிறார்கள் என்பதற்கு எந்த உத்ரவாதமும் இல்லை. அவர்கள் அதை வாங்கி, உலர வைக்கும் இடமும் சுகாதாரமானது என்று உறுதியாக சொல்ல முடிவதில்லை. தூளாக்கும் இடமும், திறந்த நிலையில் பாதுகாக்கும் இடமும் சுத்தமானது என்று சொல்வதற்கில்லை.

அதுமட்டுமில்லாமல் ஒருமாத தேவைக்கு ஒரே நாளில் அனைத்து மசாலா பொருட்களையும் வாங்கி தூளாக்கும்போது, அதில் அவர்களது மொத்த பணமும் முடக்கப்படுகிறது. அது மட்டுமின்றி சிறிய சிறிய அளவில் பாக்கெட்டுகளில் அடைத்துவைத்து அன்றன்றைய தேவைக்கு பயன்படுத்தும் மசாலா பொருட்களுக்கும் ஒரு மாத தேவைக்கு ஒரே நாளில் அரைத்து ஒரு டப்பாவில் சேமித்துவைத்து பயன்படுத்தும் மசாலாவுக்கும் குணத்திலும், மணத்திலும் வித்தியாசம் உண்டு.

இதில் இன்னொரு முக்கியமான விஞ்ஞானபூர்வமான உண்மையை நான் கூறியாக வேண்டும். உலக அளவில் தலைசிறந்தவை, இந்திய மசாலாக்கள். அவை உலக அளவில் சிறந்ததாக இருப்பதற்கு காரணம், அவைகளில் இருக்கும் அரோமா குணம்.

காய்ந்த மிளகாயில் இருக்கும் மணம், மல்லியில் இருக்கும் வாசனை - ஏலக்காய், கிராம்பில் இருக்கும் அரிய குணம் போன்றவைதான் அரோமா ஆற்றல். (தொடரும்)




உ

Cell : 98402 87570

# மங்கள ஈஸ்வரி

திருமண தகவல் கூடம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

(நேரம் : காலை 10.00 - பிற்பகல் 2.00

மாலை 4.00 - 7.00)



என். தெற்கு மாடவீதி, திருமுல்லைவாயல், சென்னை-62.

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

**மூளை, நரம்புகளின் நலம்:**

கேள்வி: ஒரு மாதத்திற்கு முன், நான் எனது ஸ்கூட்டரில் செல்லும் பொழுது சிறு விபத்திற்கு உள்ளாகி, உடனே மயக்கமடைந்து கோமா நிலைக்குப் போய்விட்டேன். நல்ல வேளை உங்களின் அறிவுரைப்படி எனது பாக்கெட்டில் எனது அடையாள அட்டையை வைத்திருந்தேன். என்னை ஆம்புலன்ஸ் உதவியோடு சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தேன். நான் கோமாவிலிருந்து பழைய நிலைக்கு வர சுமார் 24மணிநேரம் ஆயிற்று எனக்கும் வயது 56. சுகர், பி.பி. கிடையாது. எனது மூளை ஸ்கேனில் எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிய வந்தது. மூன்று நாட்களுக்கு பின்பு ஆஸ்பத்திரியில் இருந்து நலமாக டிஸ்சார்ஜ் பெற்றுவீட்டிற்கு வந்துவிட்டேன் நான் கோமாவிற்குப் போனது பற்றி டாக்டரிடம் கேட்டதற்கு, இது ஒரு தற்காலிக மறதி. விபத்தில் தலைக் காயம் ஏற்பட, மூளை அதிர்ச்சியடைய இது போன்ற தற்கால மறதி ஏற்படலாம். இது பின்னாளில் மறதி நோயாக வர வாய்ப்பு இல்லை. என்று சற்று ஆறுதலாக கூறினார். அவர் கூறியது சரியா டாக்டர். எனக்கு பின்னாளில் மறதி நோய் வர வாய்ப்புண்டா?

பதில்: நல்ல மன நிலையில் இருப்பவர்கள் திடீரென்று தன்னை அறியாமலேயே மறதியினால் பாதிக்கப்படுவார்கள் சில நிமிடங்கள் அல்லது சில மணி நேரம் கழித்து மறதியிலிருந்து மீண்டு தன் சுய நினைவுக்கு வந்து விடுவார்கள் இதைத்தான் தற்கால மறதி என்று கூறுவார்கள். இது ஏற்பட காரணங்கள்:

மூளைக்கு திடீரென ரத்த ஓட்டம் குறைத்தல்: உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மூளைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் சிறிது நேரம் தடைப்பட்டால் பக்கவாதத்தோடு பேச்சு குளறுதல் மற்றும் மறதியும் சேர்ந்து ஏற்படலாம். தக்க சிகிச்சைக்குப்பின் 24 மணி நேரத்தில் பழைய நிலைக்கே திரும்பிவிடுவார்கள்.

ரத்தத்தில் திடீரென்று சர்க்கரையின் அளவு மிகவும் குறையும் பொழுது தற்காலிக மறதி ஏற்படலாம்.

விபத்தில் ஏற்படும் தலைக் காயத்தினாலும் தற்காலிக மறதி வரலாம்

மதுவை அதிகமாக அருந்தும் சமயத்தில்.

மாத்திரைகளின் பக்கவிளைவு. உதாரணம்: தூக்கமாத்திரை, மன நோய்களுக்கு கொடுக்கும் மாத்திரை.

திடீரென்று உடலில் வைட்டமின் பி1 தையமின் குறைந்தால் ஞாபக மறதியும் அச்சமயத்தில் வர வாய்ப்புண்டு. இது முக்கியமாக மதுவை திடீரென்று நிறுத்தும் பொழுது மற்றும் அதிகமாக வாந்தி ஏற்படும் பொழுது இச்சூழ்நிலை உருவாகலாம். இவர்களுக்கு வைட்டமின் பி1 மருந்தை ஊசி மூலம் செலுத்தினால் ஞாபக சக்தி மீண்டும் வர வாய்ப்புண்டு. உங்களுக்கு விபத்தின் மூலம், தலைக் காயத்தினால் மூளையில் உள்ள மின் அதிர்வுகள் பாதிப்பால் தற்காலிக மறதி ஏற்பட்டுள்ளது. ஸ்கேன் மூலம் மூளையில் எந்த பகுதியும் பாதிக்கப்படவில்லை என்று தெரிந்தது. ஆகையால் உங்களுக்கு ஏற்பட்டது "தற்காலிக மறதியே" பின்னாளில் மறதி நோய் வர வாய்ப்பு கிடையாது.

கேள்வி:எனக்கு அடிக்கடி தலைவலி வருகிறது. வலி மாத்திரையை எடுத்துக் கொண்டால், வலி நின்று விடுகிறது. மறுபடியும் சில நாட்கள் அல்லது வாரங்கள் கழித்து அதே நிலைதான். எந்த டாக்டரிடம் போகவேண்டும்?

பதில்:தலைவலி என்பது ஒரு நோயின் அறிகுறி அல்லது வெளிப்பாடே ஆகும். அதற்குப் பல காரணங்கள் உள்ளன. தூக்கம் குறையும் பொழுது தலைவலி வரலாம், மாறாக தலையில் ஏற்படும் கட்டியினாலும் தலைவலி வரலாம். ஆகையால் தொடர்ந்து தலைவலி ஏற்பட்டால் அதை அலட்சியப்படுத்த வேண்டாம். முதலில் தலைவலிக்கான பொதுவான காரணத்தை தெரிந்து கொள்வோம். மனப் பதற்றம், ஒற்றைத் தலைவலி, தலையில் தோன்றும் கட்டி, பக்கவாதத்தினால் ஏற்படும் தலைவலி, தலைவலியை ஏற்படுத்தும் மாத்திரைகள், கழுத்து எலும்பு தேய்மானம், கண் மற்றும் சைனஸ் தொல்லைகள், உயர் ரத்த அழுத்தம், நோய் தொற்று நீங்கள் இனியும் காலந்தாழ்த்தாமல் முதலில் ஒரு பொது மருத்துவரிடம் ஆலோசியுங்கள், அவர் உங்களுக்குத் தக்க சிகிச்சையோ தேவையான ஆலோசனையோ வழங்குவார்.

**தொகுப்பு: - எல்மாமதி..**

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.
G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்
**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி** 9789427171 7397152711
**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**
கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.
**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**
எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.
நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.

**விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம் திருமண தகவல் மையம்**
**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம்
பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).
**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர்,
செல்:9486555373, 8610212126.

# உறவுகள்!

**உறவுகள் மட்டுமே ஜகத்தினை ஆளமுடியும்**

21-ம் நூற்றாண்டின் முத்தாய்ப்பாய் மாபெரும் மனிதநேயப் புரட்சி நடக்கப்போகிறது. உலகமயமாக்கல் என்ற உச்சநிலையை மனிதகுலம் அடையப்போகிறது. ஒரே கூரையின் கீழ் மனித உறவுகள் சங்கமிக்கப் போகின்றன. உறவுகளின் சங்கமம் தான் உலகமயமாக்கலின் முதிர்நிலை ஆகும். 20ம் நூற்றாண்டின் மைல்கல் நிகழ்வாக இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்டது. 20ம் நூற்றாண்டின் மைல் கல் புரட்சிகளாக, தொலைத் தொடர்புத் துறையில், கம்ப்யூட்டர், இண்டர்நெட், செல்போன்கள் ஆகியவற்றின் பயன்பாடுகள் உருவாயின. அவை இன்று, 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உலக நாடுகளையும், உலக மக்களையும் ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைக்கும் அற்புதப் பணியின் உச்சத்தை, அசுர வேகத்தில் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. 21ம் நூற்றாண்டின் மத்தியில் உலக நாடுகளில் பலவும் பொருளாதார வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கும். 21ம் நூற்றாண்டின் இறுதியில் நாடுகளைப் பிரிக்கும் எல்லைச் சுவர்களும், கோடுகளும் மறையத் தொடங்கும். தமிழ்க் கவிஞன் கனியண்பூங்குன்றனார் கண்ட 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கனவு நனவாகும் நாள் அன்றுதான்! 22ம் நூற்றாண்டில் உலகப் பொது அரசின் உலக மக்கள் சமஉரிமை, சமநிலை பெறுவார்கள்.

அந்த முதிர்நிலையின் தொடக்கப் பணிகள் இப்போது நடந்து வருகின்றன. அதன் அடையாளம்தான் ஆசிய நாடுகள் இரண்டு (சீனா, இந்தியா) உலக வரலாற்றில் முதன்முதலாக உலகப் பொருளாதார வல்லரசுகளாகத் தலையெடுக்கப் போகின்றன. 2020-களில் சீனாவும், 2030-களில் இந்தியாவும் உலகின் பொருளாதார வல்லரசுகளாக விரைவில் மாற உள்ளன. இப்படி உலகமயமாக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பொருளாதாரத்தில் தன்னிறைவை நோக்கிப் பயணமாகின்றன. அதன் உச்சமாக, நாடுகளுக்கு இடையே முதலில் பொருளாதார சங்கமம் ஏற்படும். அது, உலக மக்களிடையே மனதளவில் சங்கமம் உண்டாகும் நிலைக்கு இட்டுச் செல்லும்! அதுவே கலைகளின் சங்கமாகவும், ஆன்மீக சங்கமாகவும், வாழ்வியல் சங்கமமாகவும் பரிணாமம் பெறும். நாடுகள், மதங்கள், இனங்கள் மற்றும் மொழிகள் ரீதியாக இப்போது பிரிந்து கிடக்கும் மக்களிடையே அன்று ஆக்கபூர்வ புரட்சி வெடிக்கும்.

அனைத்து ரீதியாகவும் நல்லிணக்கமும், விட்டுக் கொடுத்து வாழும் நிலையும் உருவாகும். சகிப்புத் தன்மையும், நல்லது கெட்டதை ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் மன முதிர்ச்சியும் அப்போது உலகை ஆளும். அந்தந்த நாடுகளின் அரசுகளும், இராணுவங்களும் அந்தந்த நாடுகளை இப்போது ஆண்டு வருகின்றன. பாதுகாத்து வருகின்றன. ஒரே கூரையின் கீழ் உலகம் அமையும்போது ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு போன்ற அமைப்பின் கீழ் உலகம் வரும். ஒரே கூரையின் கீழ் உலகம் அமையும். அந்த உலக மத்திய அமைப்பானது, ஒட்டுமொத்த அரசு நிர்வாக அதிகாரத்தையும், இராணுவ பலத்தையும் தன்னிடம் வைத்திருக்கும் நிலை வரும். இப்படி பொதுவான அரசின் ஆட்சியும், அதிகாரமும் நடைமுறைக்கு வரும்போது அந்தந்த நாடுகளின் தன்னிச்சையான ஆட்சியும், நிர்வாகமும் தேய்ந்து போகும். சட்டப்படி செல்லாதவை ஆகும். கூட்டாட்சியின் கீழ் உள்ள பிராந்தியங்களாக நாடுகள் மாறும்.

அந்த நிலை வரும்போது தனிமனிதனின் நிலையும் உயரலாம். அவன் பிரபஞ்ச மனிதன் ஆகலாம். கல்லாமை, இல்லாமை எல்லாம் மாறிப் பொதுமை, புதுமை, அருமை, இனிமை எனும் வாழ்வியல் இலக்கணங்களுக்கு அவன் உள்ளாகலாம். கல்வியும், வேலையும், வாய்ப்பும், உரிமையும், உத்ரவாதமும் உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் சரிநிகர் சமமாகலாம். எல்லோரும் ஓரினம் ஆகலாம். அதாவது மனித இனம் ஆகலாம். கல்லைத்தான் மண்ணைத்தான், காச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா, இல்லைத்தான, என்னைத்தான் பொன்னைத்தான் கொடுத்துத்தான் இரட்சித்தானா என்ற உள்ளக்குமுறலுக்கு உலக அளவில் நடைமுறை வாழ்க்கையில் உருப்படியான ஒட்டுமொத்தத் தீர்வு ஒன்று உருவாகுவது சாத்தியம்.

தனிமனிதனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று அன்று பாரதி முழங்கினான். ஜெகத்தினை ஒரே கூரையின் கீழ்க் கொண்டு வருவதுதான் அதற்கு முதல் படி. உறவுகள்தானே ஜெகத்தினை ஆளமுடியும். அதை உணர்ந்த அற்புதத் தலைவர்களல்லவா இவர்கள்! (தொடரும்)


ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
மளிகை மொத்தம் , சில்லரை வியாபாரம்
Prop.S.ராமசாமி நாடார், Ph:22243263, Res:22671263, 9444150666.
நங்கநல்லூர், பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்க ஸ்தாபகர்
மற்றும் நங்கநல்லூர், பழவந்தாங்கல் நாடார் சங்க தலைவர்.
36, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600 061.







AB
Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277
ஆர்த்தி பிராய்லர்ஸ்
77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.





S.ராஜையா நாடார்
சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்
எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான
அனைத்து பொருட்களும் கிடைக்கும்
168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு,
(அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29
போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**பிரசவ வேதனை...**

எனவே அனைவரையும் அழைத்துக் கொண்டு அவன் ஓடினான்.. ஒரு கடற்கரை பிரதேசத்தை நோக்கி ஓடினான்.. பின்னர் அங்கேயே அவர்களை குடியும் அமர்த்தினான்..



இன்றும் ஜராசந்தன் உயிரோடுதான் இருக்கிறான்.. அவன் மீது கிருஷ்ணனுக்கு இருந்த யுத்த பீதியும் இன்னும் உயிரோடுதான் இருக்கிறது..

எனவே.. அதற்கு ஒரு முடிவையும் விடிவையும் தேடினான் கிருஷ்ணன்.. அதற்காகத்தான் அவன் பாஞ்சாலம் வந்தான்..

ஆனால் என்ன அதிர்ஷ்டம் பாருங்கள்.. வந்த இடத்தில் அவன் குந்தியை சந்தித்தான்.. அவளது பிள்ளைகளான பாண்டவர்களையும் சந்தித்தான்..

எனவே.. தனக்கும் ஒரு விடிவு காலம் விரைவில் வந்து விடும் என்று நம்பினான்..

பாண்டவர்களின் நெருங்கி உறவினன் அல்லவா அவன்.. அந்த வகையில் இனி துருபதனின் உறவும் அவனுக்கு கிடைக்கும்..

துருபதனின் நட்பு நாடுகளின் உறவும் கிடைக்கும்.. பாண்டவர்களுக்கு என்று ஒரு தனி நாடு கிடைத்து விட்டால்..

அப்புறம் என்ன.. ஜராசந்தனின் மிரட்டலுக்கு ஒரு முடிவை கட்டி விடலாமே..

கிருஷ்ணனின் இந்த செயல்பாடுகள் அனைத்தையும் திரவுபதியும் நன்றாகவே தெரிந்துதான் இருந்தாள்..

எனவே அவளே ஒரு சமயத்தில் சொன்னாள்.. கிருஷ்ணன் தன்னை பலப்படுத்திக் கொள்ள.. மிக சாமர்த்தியமாக பாண்டவர்களை பயன்படுத்துகிறான் என்று..

கிருஷ்ணனை சிலருக்கு பிடிக்கலாம்.. பிடிக்காமலும் இருக்கலாம்..

ஆனால் அவனது அரசியல் சாதுரியத்தை பொருத்த வரையில்.. அவனது எதிரிகளால் கூட அவனை பாராட்டாமல் இருக்க முடியாது..

அவனது மூளை முழுவதுமே முடிச்சுகள்தான்.. அவனுக்கு மட்டுமே அதை போடவும் தெரியும்.. அவிழ்க்கவும் தெரியும்..



இப்போது கூட முடிச்சு ஒன்றை போட்டு விட்டுத்தான் அவன் நிற்கிறான்.. இதோ.. ஓலை ஒன்றை எழுதி விட்டான்.. அஸ்தினாபுரத்துக்கு..

இனிமேலும் பாண்டவர்கள் நாடற்றவர்களாக இருக்க மாட்டார்கள்.. ஆகவே.. அஸ்தினாபுரத்தை இரண்டாக பிரிக்க வேண்டும்..

ஒரு பாதியை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.. மறுபாதியை பாண்டவர்களுக்கு கொடுத்து விடுங்கள்.. இதுதான் அந்த ஓலை..

**அரச கட்டளை...**

பாஞ்சாலத்திலிருந்து கர்ணனும்.. துரியோதனனும் வந்து விட்டார்கள்..

வந்தவர்கள் சொன்ன செய்தியை கேட்டதுமே.. அதிர்ந்து நின்றான் சகுனி..

பாண்டவர்கள் உயிரோடு இருக்கிறார்களா.. எப்படி.. அவனால் நம்ப முடியவில்லை.. ஒப்புக் கொள்ள முடியவில்லை.. தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை..

திருதராஷ்டிரனுக்கும்கூட அந்த செய்தி பிடிக்கவில்லைதான்.. என்றாலும் அதை அவன்வெளியே காட்டிக் கொள்ளவில்லை..

தம்பியின் பிள்ளைகள் பிழைத்திருப்பதை எண்ணி பெரும் மகிழ்ச்சி அடைகிறேன் என்றான்.. ஒரு பொய்யை சொன்னான்..

ஆனால் பீஷ்மர் மகிழ்ச்சியில் இருந்தார்.. என்ன இருந்தாலும் பாண்டவர்கள் அவரது பேரப் பிள்ளைகள் அல்லவா..

விதுரனுக்கோ இதுவரை நடந்தவை அத்தனையுமே தெரியும்.. ஆனாலும் அப்போதுதான் பாண்டவரை பற்றி அறிந்தவனைப் போல் நடித்தான்..

இந்த நிலையில்.. இன்னொரு இடியும் திருதராஷ்டிரனை தாக்கியது..

பாண்டவர்கள் ஐந்து பேருக்குமே திருமணம் முடிந்து விட்டதாம்.. மணமகள் திரவுபதியாம்..

அஸ்தினாபுரத்தின் ஆட்சி பீடத்தையே அதிர வைத்தது அந்த செய்தி.. அடுத்த பத்து நாட்களில்..

இன்னும் ஒரு செய்தி.. அதுவும் பாஞ்சாலத்திலிருந்து தான் வந்தது.. (தொடரும்)


விலைகுறைவு! R.Suresh Ph: 2226 6961, 22266962 மனநிறைவு!

AMUTHA & CO



Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells

1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.



அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



Ph:28440171. 28442494.

E.D.THANGARAJAN & SONS

Authorised Stockist in: Indian Cement Ltd. & Zuari Cement Steel, Firewood, Charcoal, Bricks, Sand, Blue Metals etc..,

New No:14, (OldNo:10), Ganapathy Mudali Street, Triplicane, Chennai-5. (Near Parthasarathy Swamy Temple)

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



23.தன் கையை பற்றி இழுத்த சத்திய வேந்தனிடமிருந்து திமிறி விலகினாள் சாவித்திரி. கொக்கரித்தபடி மீண்டும் அவளை நோக்கித் திரும்பினான்.

"நில்! உனக்கு அந்த அயோக்கியன் வாங்கிய பணத்தை நான் தந்து விடுகிறேன். எடுத்துக் கொண்டு போ! " தன் கைப் பையிலிருந்து பணத்தை எடுத்து அவன் முன் வீசினாள்.

அவன் பார்வை ஆவலோடு சிதறிக் கிடக்கும் கரன்சி நோட்டுக்களின் மீது தாவியது. "எவ்வளவு பணம் போட்டே?"

"ஐம்பதாயிரம்! போதுமா?!"

"பரவாயில்லையே...!" பணத்தைக் குனிந்து குனிந்து பொறுக்கினான். சாவித்திரி கண்கள் வீட்டுக் கதவின் பூட்டும் சாவியும் இருக்கும் இடத்தை துழாவின. குறித்த இடத்தில் பூட்டுடன் சாவி இருப்பது தெரிகிறது.

அவனை பார்த்தாள்.

சிதறியோடும் நெல்லிக்காயைப் பொறுக்கும் குழந்தையின் தாகத்தோடு பணத்தை பொறுக்குவதில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தான்.

போதுமானதாயிருந்தது!

அவன் பணத்தைப் பொறுக்கும் நேரமே போதுமானதாயிருந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் பூட்டையும் சாவியையும் கையிலெடுத்தபடி வாயிலைத் தாண்டி வெளியே ஓடினாள்.

அவன் எழுந்து...மிமிர்ந்து... திரும்புவதற்குள் வெளிக்கதவை இழுத்து மூடி... வெளியில் நின்ற பூட்டைப் போட்டாள். சாவியைக் கையிலெடுத்தாள்.

"திருடன்...! திருடன்...! உதவி.. உதவி..! தெருவில் நின்று கூவினாள்.

போவோர்.. வருவோர்... அக்கம் பக்கத்து வீட்டார் வந்து கூடினார்கள். எதிரே....தெருக்கோடி மளிகைக்கடை பையன் ஓடி வந்தான்.

அவனிடம் கேட்டு காவல் நிலையம் சற்று தொலைவில்தான் இருப்பதைத் தெரிந்து கொண்டாள். "என்னக்கா... போலீசை கூப்பிட வேண்டுமா?" மளிகைக் கடைப்பையன்.

"ஆமாம் தம்பி, ப்ளீஸ்... போய் கூட்டி வர முடியுமா?"

"நிச்சயம்! நான் ஓடிப்போய் போலீசை கூட்டிக் கொண்டு வருகிறேன். " ஓடினான். "திருடன் எங்கேம்மா?" ஒரு நடுத்தர வயது மனிதர் கேட்டார்.

"உள்ளே... உள்ளே.!" விரலால் வீட்டைக் காட்டினாள். விரல் நடுங்கியது.

"வீட்டிற்குள்ளேயா?"

"ஆமாம்!"

"எப்படி உள்ளே...?"

"நான் தந்திரமாய் அவனை ஏமாற்றி விட்டு ஓடி வந்தேன்..."

"உள்ளே திருடன் என்ன செய்கிறான்?"

"என்னிடமிருந்து பணம் ஐம்பதாயிரத்தையும் எடுத்துக்கொண்டு..... என்னையும் பலவந்தப்படுத்த முயற்சி செய்தான்.!"

அப்படியா? பிடியுங்கள் அவனை..!" ஒரு துடிப்பான இளைஞன் முன்னால் வந்தான். அவன் வேகத்தைப் பார்த்ததும் மற்றவர்களின் வேகமும் கூடியது. சாவித்திரியை வீட்டைத் திறக்கச் சொன்னார்கள்.

"கொஞ்சம் பொறுங்கள். போலீஸ் வந்துவிடட்டும்.."

"போலீஸ் வருவதற்குள் வீட்டிற்குள் தற்கொலை செய்துவிட்டால் என்னம்மா செய்வீர்கள்...?"

"அப்படிக் கூட செய்வானா...?" சாவித்திரி.

"ஏன் செய்யக்கூடாது?"

"சரிசரி கதவைத் திறக்கிறேன்." சாவித்திரி பூட்டைத் திறந்தாள்.

கூட்டம் வீட்டைச் சுற்றி நின்றது. வாயிலில் சுமார் இருபது இளைஞர்கள் நின்று கொண்டார்கள். ஒருவன் கதவைத்திறந்தான்.

அவ்வளவுதான்....!

பொறிக்குள் அகப்பட்டிருந்த எலி வெளியில் பாய்வது போலப் பாய்ந்தான். இத்தனைநேரம் உள்ளே அகப்பட்டுக் கிடந்த சத்திய வேந்தனை பாய்ந்து பிடித்தார்கள் இளைஞர்கள். ஆள் ஆளுக்கு தர்ம அடி கொடுத்தார்கள்.

பையன் போலீசுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

போலீசை கண்டதும் தர்ம அடி கொடுத்தவர்கள் தலையை பின்னுக்கு இழுத்துக் கொண்டு விலகினார்கள்.

"அடடே... இவன் பெரிய பேட்டை பிஸ்தாவாயிற்றே...! எப்படி இங்கே மாட்டினான்....?" சப்-இன்ஸ்பெக்டர் தன் கைப்பிரம்பால் அவன் தாடையை நிமிண்டித் தூக்கினார்.

முகம் வீங்குமளவு அடிப்பட்டிருந்தான் அவன். அவன் பேண்ட் பாக்கெட்டுகளில் சட்டைப் பைகளில் பிதுங்கிய பணக்கற்றைகளைக் கையிலெடுத்தார் சப் - இன்ஸ்பெக்டர்.

"என்னடா.. உன் கைவரிசை இங்கே பலிக்கவில்லையா?" சப்- இன்ஸ்பெக்டர்.

மௌனமாயிருந்தான் அவன்..

"கான்ஸ்டபிள்ஸ்... இவனைப் பின் கைகளைக் கட்டி நாயை இழுக்கின்ற மாதிரி தெரு வழியே இழுத்துக் கொண்டு வாருங்கள்."

"என்னம்மா நடந்தது...?"

சொன்னாள்.

"சரி ஸ்டேஷனுக்கு வந்து ஒரு புகார் எழுதி கொடுங்கள்"

"வருகிறேன்.சார்.." கதவை மூடிக்கொண்டு புறப்பட்டாள்.

காவல் நிலையத்தில் விசாரணை நடந்தது.

ரகுவரன் எழுதித் தந்த பத்திரத்தைக் காட்டினான் அவன்.

அவமானத்தால் தலை குனிந்து அமர்ந்திருந்த சாவித்திரியை பார்த்தார் சப்-இன்ஸ்பெக்டர்.

"என்னம்மா இது....?

"இப்படிக்கூட ஒரு வியாபாரத்தை சட்டம் அனுமதிக்குமா சார்?" கோபத்துடன் கேட்டாள் சாவித்திரி.

"ஏன் கோபப்படுகிறீர்கள்?"

"பின் என்ன சார்? இந்த நாட்டில் பிறந்த என்னை எவனோ ஒருவன் விற்கிறான். எழுதிக் கொடுக்கிறான். அதைக் காட்டி ஒருவன் தனியாயிருக்கும் என்னை பலவந்தப்படுத்துகிறான்... பணத்தைக் கொள்ளையடிக்கிறான். நீங்கள் அவன் காட்டிய பத்திரத்தை வைத்துக் கேள்வி கேட்கிறீர்களே... இதுதான் சுதந்திரமா....? இதுதான் பெண்கள் விடுதலைக்கு எடுத்துக்காட்டா...?"

"ரிலாக்ஸ் மேடம் ... ரிலாக்ஸ்...! உணர்ச்சி வயப்படாதீர்கள். இந்த பாண்ட் விசயம் எந்த சட்டத்தாலும் ஏற்றுக் கொள்ளப்படாது என்பது நிஜம்தான். ஆனால் இதை உங்கள் கணவன் எழுதியிருக்கிறானே என்பது அதிர்ச்சியாயும்... ஆச்சர்யமாயுமிருக்கிறதல்லவா?"

குலுங்கினாள் அவள்.

"அழாதீர்கள் மேடம்..."

அழுகை ஓய்ந்தது. கண்களை துடைத்து சேலைத் தலைப்பில் மூக்கைச் சிந்தினாள்.

"நீங்கள் கேட்டீர்களே உன் கணவன் என்று...? எவனாவது கணவனாயிருந்திருந்தால் இப்படி என்னை விற்பானா? அவன் என் எதிரி பரம எதிரி என்றவள் நடந்து போன விசயங்களைச் சொல்லி முடித்தாள்.

போலீஸ் துணை ஆய்வர் மனித நேயம் சுரக்க எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

"இந்தப் பணம் உங்களுக்கு எப்படிம்மா வந்தது?"

சொன்னாள்.

"குட்! படித்தவர் என்பதால் புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டீர்கள். உங்கள் பெயர்...? சொன்னாள்.

ஊர் சொன்னாள்.

வேலை பார்க்கும் கம்பெனியைக் கேட்டார். அவள் சொன்னதும் வியப்பால் அவர் கண்கள் விரிந்தன.

"அங்கேயா நீங்கள் வேலை செய்கீறீர்கள்...?"

"ஏன் சார் அப்படிக் கேட்கிறீர்கள்..."

"அவர்தான் என்னைக்கூட இந்த அளவுக்கு உத்தமர். திருமணமே செய்து கொள்ளாத அந்த நல்ல மனிதரால் வாழ்ந்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா...? மேடம்... நீங்கள் அங்கே வேலை பார்ப்பதே உங்களின் அதிர்ஷ்டம்! நான் ஐயாவுக்கு போன் பண்ணட்டுமா?"

"ப்ளீஸ், வேண்டாம்! தயவு செய்து இந்த விசயம் இப்போதைக்கு அவருக்குத் தெரிய வேண்டாம்." கெஞ்சினாள்.



வி ஜி பி
க்ளோவூட் தமிழ்க் கல்வியாலயம்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
தென் ஆப்பிரிக்கா
டர்பனில்
நடைபெறும்
தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளில்
வி ஜி பி
உலகத் தமிழ்ச் சங்கத்தின்
157 ஆவது
திருவள்ளுவர்
சிலை
திறப்பு விழா!
நாள்: 01.11.2023
இந்திய நேரம்: இரவு 9:30 மணி
தென் ஆப்பிரிக்கா நேரம்: மாலை 5 மணி
vgpulagatamilsangam
டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்கள்
காணொளி மூலம் திறந்துவைக்கிறார்!




Thiru Kalyanammalai
www.thirukalyanammalai.com
கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
We Wish You
MERRY CHRISTMAS
And
HAPPY NEW YEAR
Exclusive
Christian Matrimony
Website & App
Login Now
to get best
Marriage
Alliance
Register
Free
பிரத்யேக கிறிஸ்தவ திருமண
தகவல் இணையதளம்
Visit Our Website Scan QR Code
சிறந்த திருமண வரன் அமைந்திட இலவசமாக
பதிவு செய்து கொள்ளுங்கள்..
நீங்களே தேவையான விபரங்களை வெப்சைட் மற்றும் மொபைல் ஆப் மூலமாக தேடிக் கொள்ளலாம்.
Download This App
6369291123 / 7397162034
Available on the
Google Play
thirukalyanammalai@gmail.com
வீட்டிலிருந்தபடியே வரன் தகவலை வாட்ஸ் ஆப்பில் பதிவு செய்யலாம்.
No. 2, Sriram Avenue, Shop no. 3, 1st Floor,
Arul Nagar Main Road,( Near Arul Nagar Bus Stop) Madhavaram, Chennai.

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**விடுதலை என்ற விருட்சத்தில் பாரதியார்!**



சில சமயங்களில் நமது திறமை நமக்கே தெரியாமல் அதைப் பயன்படுத்தும் வழிமுறை தெரியாமல் வெற்றி வாய்ப்பை இழந்த விஷயம் நிறைய உண்டு. ஒருவிதை என்று பார்த்தால் அது உருவில் சிறியது என்று அலட்சியமாக நினைக்கக் கூடாது. அந்த விதைக்குள் ஒரு விருட்சம் பெரியமரம் இருக்கிறது என்பதை உணர வேண்டும். முறைப்படி அதை மண்ணில் புதைத்து நீர்விட்டால் நிச்சயம் அது சிறிய செடியாக வளர்ந்து நாளடைவில் உருவில் பெரிய மரமாக தன் விஸ்வரூபத்தைக் காட்டும். அதுதான் விதைக்குள் விருட்சம் எனச் சொல்கிறோம்.

"விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்த
சிட்டுக்குருவியைப் போல" என்று

சுதந்திரதாகத்தோடுப் பாடிய பாரதியார் வாழ்க்கையிலிருந்து ஒரு சம்பவம்.

இளம்வயதில் பாரதியார் எட்டையபுரச் சமஸ்தானத்தில் கைகட்டி வேலை பார்க்கும் ஒரு சூழ்நிலை வந்தது. காசியில் சுதந்திரமாக வாழ்ந்த பாரதிக்கு எட்டையபுர அரண்மனையில் ஒடுக்கிக் கிடக்க முடியவில்லை. இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக வீரமுழக்கமிடும் கவிதைகளை எழுதிப் பாடி மக்கள் மனதில் விடுதலைப் போராட்ட உணர்வுகளைத் தூண்டும் புனிதப் பணி பரந்து விரிந்தது. பாரதியென்ற விதைக்குள் பெரிய மரமாக இந்த எண்ணங்கள் அடங்கிக்கிடந்தன. மேலும் சுதந்திரவேட்கை மிகுந்த பாரதிக்குப் பிடிக்காத ஒரு விஷயம் அவரைக் கட்டுப்படுத்துவது. மன்னரின் முன்னேயாரும் மேலே துணி அணியக்கூடாது என்பது வழக்கம். மன்னர் தெருவில் போனால் எல்லோரும் எழுந்து கைகட்டி நிற்க வேண்டும். இப்படி ஒரு வழக்கமும் எட்டையபுரத்தில் உண்டு.

இது பாரதியாருக்குப் பிடிக்கவில்லை. விட்டு விடுதலையாவதற்கு உண்டான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார். அவர் எதிர்பார்த்த வாய்ப்பும் வந்தது. ஒரு சமயம் மன்னர் தெருவில் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது பாரதியார் அங்குள்ள ஒரு வீட்டில் அமர்ந்திருந்தார். மன்னர் அருகில் வந்தும் அவர் எழுந்து நிற்கவில்லை. அவர் வேறு சிந்தனையில் இருந்ததால் அவர் எழுந்து நிற்கும் வழக்கத்தை மறந்தார். இதனால் அரண்மனையில் ஒரு குட்டிக் கலவரமே ஏற்பட்டது. பாரதியாருக்கு வேலை போய்விட்டது. அவர் கவலைப்படவில்லை பரந்து விரிந்த தமிழகத்தில் அவரது செயல்பாடுகள் நிறைய இருக்கும் பொழுது, இதைப் பற்றி அவர் பெரிதாக நினைக்கவில்லை.

சிலர் பாரதியிடம் மன்னரைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டால் மீண்டும் வேலை கிடைக்கும் என்று யோசனை சொன்ன போது "எட்டயபுரம் என்பது ஒரு சிறிய அளவிலான பூமிதான் உலகம் பெரியது. அதில் எனக்கு இடமிருக்கிறது! இந்த பாரதியின் பணி பெரிது. அதற்குரிய களம் இதுவல்ல" என்று புறப்பட்டார். தமது கவித்திறனால் மக்கள் மனதில் விடுதலை என்னும் விதையை விதைத்தார். அவரது சாதனை விருட்சமாகப் பெரியமரமாக வளர்ந்தது. இன்றும் பாரதியின் கவிதைகள் நம்மை மெய்சிலிர்க்க வைப்பதற்கு அன்று அவர் எடுத்த விசாலமான முடிவுதான் காரணம். விதையாய்ச் சுருங்கி நிற்காமல் பெரியமரமாய் வளர்ந்து மனிதச் சமுதாயம் பயன்படும் அளவில் செயல்பட்டார்.

எனவே சாதனை என்பது விதையில் அல்ல அதன்மூலம் வளரும் மரத்தில் தான் இருக்கிறது. உங்கள் திறமையைப் புரிந்து கொண்டு தைரியமாக முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்.


# அந்தமான் தீவுகள் சுற்றுலா

**கப்பல் | விமானம் | படகு | சுற்றுலா**

**➢பாஸ்போர்ட் தேவையில்லை**

**➢பள்ளிக்கூடத்தில் ஜாதி சான்றிதழ் தேவை இல்லை.**





**சி.பாபு**

**✈ 9884607657**

**✈ 8939888585.**

**✈ அந்தமான் எக்ஸ்பிரஸ் டிராவல்ஸ் J.K.A.காம்ளக்ஸ், எண்:195/96, தம்புசெட்டி தெரு, காளிகாம்பாள் கோவில் அருகில், சென்னை-600 001.**

**✈ Email:**

**andamanstours@gmail.com**




# உன் சிந்தனை உனது வெற்றி

**நிகழ்காலத்தை வெற்றி கொள்ளுங்கள்**



- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456**,

பதினேழு வயதான போது, பிரெஞ்சு மன்னர் சார்லஸிடம் சென்று, தான் கொண்டிருந்த நம்பிக்கையை தெரிவித்தான்.

மன்னரும், அவளுடைய நம்பிக்கையை பாராட்டி, ஒரு கவசம் அளித்ததோடு, படையொன்றையும் அவளுடன் அனுப்பி வைத்தார். அவளும் படை நடத்தி இங்கிலாந்தை வெற்றி கொண்டாள் இது வரலாறு.

சாதாரண மனிதர்களும் தங்களுடைய அசாதாரண மன உறுதி மூலம் வெற்றி பெற முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் அல்லவா!

தன் முயற்சியில் தீவிர நம்பிக்கை கொண்டால் அந்த நம்பிக்கையானது இலக்கை நோக்கிச் சென்று எளிதில் வெற்றி பெற வைக்கும்.

"எனவே எது நடந்தாலும்
நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். துணிவோடு முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்."

"மகிழ்ச்சி உங்கள் வயதில்
பத்து வயதைக் குறைத்துக் காட்டும்
கவலை அகால முதுமையை
பரிசாக உங்களுக்கு வழங்கிடும்"

கவலை இடம் பெற்ற மனதில் நம்பிக்கையை அமர்த்தி விடுங்கள். உலகிலேயே அதிக சக்தி மிக்கவை அச்சமின்மையும் நம்பிக்கையுந்தான்.

அச்சமின்மையை விட நம்பிக்கை கூடுதல் சக்தி வாய்ந்தது. எனவே உங்கள் மனதில் நம்பிக்கைக்கு முதலிடம் அளியுங்கள்.

கடவுளை நம்புங்கள் வாழ்க்கை என்பது இந்த நாளில், இந்த கணத்தில் வாழ்வதுதான் வாழ்நாள் என்கிறபோது இன்றைய பொழுதை இன்று என்பதில் இந்தக் கணத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள்.

கவலைப்படுகிறவரிடம் தைரியம் இருப்பதில்லை. தைரியம் உள்ளவர் கவலைப்படுவதில்லை. எனவே துணிச்சலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஓய்வாக இருங்கள் ஏதாவது ஒரு பொழுது போக்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உறக்கம், இசை, தெய்வ நம்பிக்கை தேவை. ஒரு நல்ல புத்தகம், வார விடுமுறையில் மகிழ்வுப் பயணம், இவையும் பேருதவி புரியும்.

நீங்கள் ஆர்வமுடையவராயிருங்கள். ஆர்வம் உடையவருக்கு அவரைச் சுற்றியிருப்பவர்கள் பக்கபலமாயிருப்பார்கள். கடவுளுந்தான்.

மனிதர் ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. உங்களிடமும்தான்.

தாகூருக்கு கவிதை எழுதும் திறமை இருந்தது.

மகாத்மாகாந்திக்கு சத்தியத்திற்காகப் போராடும் திறமை இருந்தது.

ஆபிரகாம் லிங்கனிடம் அயராத முயற்சி இருந்தது.

சர்ச்சிலிடம் இங்கிலாந்து மக்களைக் கட்டிப்போடும் திறமை, பேச்சுத்திறன் இருந்தது.

ராக்பெல்லரிடம் பணம் பண்ணும் திறமை இருந்தது.

அடுத்தவரிடம் இருக்கும் ஒன்றுக்காக, தங்களிடம் இல்லாத ஒன்றுக்காக அவர்கள் கவலைப்படவில்லை.

தங்களிடம் எது விசேமாயிருந்ததோ அதை மேம்படுத்திக் கொண்டார்கள் வெளிப்படுத்தினார்கள்.

"பில்கேட்ஸ் கம்ப்யூட்டரில் மன்னனாக இருக்கலாம், ஆனால் சச்சினைப் போல கிரிக்கெட்டில் வல்லவராயிருக்க முடியாது. உங்களிடமிருக்கும் ஓவியம் வரையும் திறன் அவர்கள் இருவரிடமுமே இருக்காது.

பிறகு எதற்காக நீங்கள் தாழ்வுமனப்பான்மை கொள்ள வேண்டும். எனவே தாழ்வுணர்ச்சியை விடுத்து வாழ்க்கையில் வெற்றி பெற முயற்சி செய்யுங்கள்.

"இன்று என்பதே வாழப்படுவது நேற்று
என்பது வெறும் நினைவாகும்"

இந்தக் கருத்தை உங்கள் மனதில் ஆழப்படுத்திக் கொண்டால் வியக்கத்தக்க மாற்றம் வாழ்வில் வந்துவிடும்.

இன்றில் இருந்து கொண்டு நேற்றில் வாழ முடியாது.

கடந்த கால மகிழ்ச்சிகளை மனதில் வைத்துப் போற்றலாம். பழைய வருத்தங்களை ஒரேடியாக மறந்து போவதற்கில்லை.

ஆனால் நேற்றைய மகிழ்ச்சியையும் துயரங்களையும் நீங்கள் வெறும் நினைவுகளாகத்தான் கொள்ள வேண்டுமே தவிர, இன்றோடு மோதும் உணர்வுகளாய்க் கொள்ளக்கூடாது.

"நினைவுகள் வேறு
நிகழ்வுகள் வேறு
விட்டுச் சென்றவைகளுக்காகக்
கதவுகளை ஏன் விரிய திறந்து வைத்திருப்பது?"

நீங்கள் பயன்படுத்தக் கூடியதும் உங்களுக்கு பயன்படக் கூடியதும் இன்றைய பொழுது மட்டுமே!

எனவே கடந்த காலத்தை நினைத்து கலங்குவது என்பதை விடுத்து, நிகழ்காலத்தை வெற்றி கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# வா....வியாபாரி ஆகலாம்

## 9.தெனாவட்டு

**அமுதா B.பாலகிருஷ்ணன்**



எக்காரணம் கொண்டும் தெனாவட்டு வந்துவிடக்கூடாது என்பது மிக மிக முக்கியம்.

தெனாவட்டு உள்ளவனிடம் ஒரு எகத்தாளம் உருவாகிவிடும். யாரையும் மதிக்காத தன்மை வந்துவிடும்.

“எங்க கடையில நான் வச்சதுதான் சட்டம், நான் இல்லன்னா எங்க கடையே இல்லை” - அப்படிங்கிற மாதிரி பேசிகிட்டு அலையச் சொல்லும்.

கடையில் வேலைக்குச் சேரும்போது “அ”னா, ஆ”வன்னா தெரியாது. A, B, C,D - ன்னா என்னன்னு தெரியாது.

கொஞ்ச நாள் ஆகி எல்லாம் பழகிய பின் “என்னைவிட்டால் யாருமில்ல”-ங்கிறகெத்து வந்துவிடும்.

நமக்கு அந்த மாதிரி நெனப்பு துளி கூட துளிர் விடக்கூடாது.

முதலாளி காலம் காலமா வியாபாரம் பண்ணி கிட்டுருப்பவர், எத்தனையோ பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்து உருவாக்கிவிட்டுக் கொண்டிருப்பவர்.

ஆலமரமாய் அவர் இருப்பார், அதில் வந்தமர்ந்து செல்லும் பறவைகள்தாம் தொழிலாளர்கள்.

“நான்போடும் “எச்சம்” தான் இந்த மரத்துக்கு அடிஉரம், இல்லையேல் இந்த மரம் இவ்வளவு செழிப்பாக வளர முடியாது” - என்று எந்தப் பறவையாவது எண்ணுமானால், அந்தப் பறவையைப் பற்றி நாம் என்ன நினைப்போம்?

மண் ரோட்டில் ஒரு பஸ் போனது. போன வேகத்தில் ரோடெல்லாம் ஒரே தூசி மயமானது.

பஸ்ஸீக்குப் பின்னால் ஒரு பட்டாம்பூச்சி பறந்து சென்றது.

“ஆகா... நாம் பறக்கும் வேகத்தில் எவ்வளவு தூசி கிளம்புகிறது” என்று பெருமைப்பட்டுக் கொண்டால், அந்த பூச்சியைப் பற்றி நாம் என்ன நினைப்போம்...?

அதேபோல்தான்..., “என்னால்தான் இந்தக்கடை நடக்கிறது, நான் இல்லாவிட்டால் கடையே கிடையாது”ங்கிற மாதிரி சிலர் சொல்லுவாங்க.

“எங்க முதலாளிக்கே நான்தான் சொல்லிக் கொடுத்தேன், இல்லாவிட்டால் எங்க முதலாளிக்கு அதெல்லாம் தெரியாது”

“அது என்னாலதான் ஆச்சு, இது என்னாலதான் நடந்துச்சி” - இந்த மாதிரி தெனாவட்டுப் பேச்செல்லாம் பேசுறவங்க உண்டு.

எக்காரணம் கொண்டும் நமக்கு அந்த தெனாவட்டு வரவே கூடாது.

சரி, நாமே அப்படி சில ஐடியாக்கள் கொடுத்திருந்தாலும், நாமே வழிகாட்டியாக அமைந்திருந்தாலும் - அப்படிச் சொல்லிக் காட்டலாமா..?

நமது தனித்திறமையை, புதிய சிந்தனைகளை புகுத்துவதால்தானே நாம் அங்கே பளிச்சென்று தெரிகிறோம்.

இன்றைக்கு நாம அப்படி பிரகாசமாக இருந்து கடையின் வெற்றிக்குப் பாடுபட்டால்தானே, நாளை நாம் கடைவைக்கும்போது நமக்கும் நல்ல பிரகாசமான குமாஸ்தா கிடைப்பான்.

இன்றைக்கு நாம தெனாவட்டுல இருந்தால், நாளைக்கு நமக்கு அப்படி தெனாவட்டுலதான ஒருத்தன் வந்து சேருவான்.

நம்ம கூட இருந்துகிட்டு வேலை செய்யாதவனை நாம திருத்திடலாம், சோம்பேறியைக் கூட சுறுசுறுப்பா மாத்திடலாம், ஒண்ணும் தெரியாதவனைக் கூட கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லிக் கொடுத்து வியாபாரத்தைப் பண்ணிச்சிடலாம்.

“எங்க முதலாளிக்கு என்ன தெரியும்? எல்லாம் நான்தான்”-ங்கிற மாதிரி தெனாவட்டுல பேசுறவனை ஒருநாளும் திருத்தவே முடியாது!

அவன் சகவாசம் நமக்குத் தேவையில்லை என்பதைவிட, முதலாளியிடம் வேறுவிதமாகப் பக்குவமாகச் சொல்லி அவனை கடையைவிட்டு நிறுத்துறது உத்தமம்.

ஏனென்றால் அந்த விஷச் செடி எல்லோரையும் கெடுத்துவிடும்.

அவனலாம் வேற எங்கேயாவது போய் வாங்கி கட்டினால்தான் திருந்துவதற்கு வாய்ப்பு உண்டு.

வாங்கிக் கட்டினாலும் சில ஜென்மங்களுக்குப் பிறவிக் குணம் போகாது.

“தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

ஒரு சிங்கம் காட்டு வழியே நடந்து வந்து கொண்டிருந்தது.

எதிரிலே ஒரு எருமை வந்தது.

“ஏய் ..நில்லு ... இந்தக்காட்டுக்கு யார் ராஜா?... சொல்லு.. என்றது.

“நீங்கள்தான் சாமி” என்றது எருமை.

“ஞாபகம் இருக்குல்ல... சரி போ”

அப்புறம் ஒரு கரடி வந்தது, அதனிடமும் அப்படியே கேட்டது, அதுவும் சொன்னது, சென்றது.

இப்படியே வழியில் வரும் மிருகங்களை யெல்லாம் கேட்டது.

கொஞ்ச நேரம் கழித்து, ஒரு பெரிய யானை வந்தது.

“ஏய்.... என் எம்முன்னாடியே, கையை வீசிகிட்டு வர்றியே... நில்லு, இந்தக் காட்டுக்கு யார் ராஜா.. சொல்லு..” என்றது சிங்கம்..

யானை நின்றது...

துதிக்கையால் சிங்கத்தைப் பிடித்துச் சுழற்றி தூர எறிந்தது.

“தட்டுத்தடுமாறி எழுந்த சிங்கம், “என்னப்பா இது...? விடை தெரியலைன்னா தெரியலைன்னுட்டுப் போ, அதுக்கு எதுக்கு தூக்கி எறியுற” -ன்னு சொல்லி ஓடிப்போயிடிச்சி.

அப்படி..., தெனவெடுத்தவன் எங்கயாவது வாங்கிக் கட்டிக்குவான். - நமக்கென்ன!






செல்:9444484977, 9962454977, 044-25980239.

**ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்**



**ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்**

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை



Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


MGM
WE'RE
BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2021-2023
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.12.2023
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/21-23

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.



# PETER RATNAM

Find out if you are eligible

- to study,
- to work,
- immigrate to, or
- do business

in Canada

## CONTACT FOR CONSULTATION

Phone + WhatsApp: +1 (604) 832 4145
WhatsApp: +91 89257 49600
Email: ***rrcics.peter@gmail.com***

Website:

RCIC
Regulated Canadian Immigration Consultant
TM

RR CANADIAN IMMIGRATION

## RCIC# 508605

Office Branches:
Surrey & Terrace, BC, Canada & Chennai, TN, India

## CONTACT IN INDIA

Ruben: +91 73395 91880

Find our sister company at **bloomingbudsmatrimony.com**